96

786

இஃது

மதபேதகம் ஜாதிபேதகமென்றில்லா

பொதுநல நீதிகளைக் கூறும்

மூன்று பாகமும்

சேர்ந்த

சர்வமத சமரஸ போதினி.

இதனை

வட ஆர்காடு ஜில்லா வலாஜா தாலுக்கா மேல்விஷாரம்

கடைக்கார அப்துல் கனீ சாகிபவர்கள் குமாரர்

(அஹ்ஸன்) க. முஹம்மது இப்றாஹீம் சாகிபவர்கள்

கோர்வைச் செய்து

முதற்பாக மதிப்புரையிற்கண்ட மஹான்களால் பரிசோதித்து

தென்னாற்காடு, டி., நெல்லிகுப்பம் கைலி மர்சண்ட்

மஹாகனம். ஆலிஜனாப்,

எஸ். பி. எம். எ. அப்துல் ஹமீது அண்டு கோ.,

அவர்கள் பொருளுதவியின் முயற்சியால்

சென்னை

ஸோல்டன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

விலை அணா 1½. பாகம் 3க்கு விலை அணா 4.

]

[ரிஜிஸ்த்தர் - காபிரைட்.

Q
N132.1-3.
149283.

ரிஜிஸ்த்தர் அறிவிப்பு.

இந்த சர்வமத சமரஸபோதினி. என்னும் புத்தகத்தைக் கோர்வை செய்தச்சிட்டு வெளியிட்டவரான வாலாஜாதாலுக்கா, மேல் விஷாரம் கடைக்கார அப்துல் கனீ சாகிபவர்கள் குமாரர் (அஹ்ஸன) க. முஹம்மது இப்ருஹீம் சாகிபவர்கள் பெயரால் சென்னையிலும், புதுவையிலும் கனம் போருந்திய கவர்மெண்டு புக் ரிஜிஸ்த்தரார் சட்டப்படிக்கி ரிஜிஸ்த்தர் செய்யப்பட்டிருக்கிறதென்பதையும் ஷை யார் அனுமதியின்றி இப்பெயர் பொதிந்த புத்தகத்தையாவது பாட்டுகளையாவது அச்சிடப்படாதென்பதைப் புத்தக வியாபாரிகளுக்கும் அச்சுக்கூடத் தலைவர்கள் முதலிய யாவருக்கும் இதனல் தெரிவிக்கப்பட்டது.

இங்ஙனம்.

க. முஹம்மது இப்ருஹீம்,

மேல் விஷாரம் P. O., (நார்த்தாற்காடு).

கவனிப்பு.

1-வது :—இப்புத்தகமிது முதற் பதிப்பானதால், எழுத்துகளின் வல்லின மெல்லினத்தில் சில பல பாட்டுகளில் சருகுதல் காண்கினும் அதை கல்விக்களஞ்சியர்கள் முறைபோல், படிக்க மிக்கத் தாழ்மையுடன் விரும்புகின்றனம்.

2. வது :—இதனைக் கைபற்றும் நண்பர்கள் அடியிற் குறித்துள்ள பிழை திருத்தத்திற்கண்ட பிழைகள் 6-ம் முன்னதாக திருத்திக்கொண்டு படிக்க கோருகின்றனம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	26	வாழ்வதுடனே.	லாழ்வதுடனே.
5	25	பகர்வலே.	பகர் விலே.
6	15	வேணலன்.	வேணபலன்.
7	15	பணமுபண்ணும்,	பணமு மண்ணும்.
12	7	பாழ் புவியல்.	பாழ் புவியில்.
15	22	புடைத்தோன்.	படைத்தோன்.

மதிப்புரைகள்.

ருயவேலூர் பாபுருயர் வீதியில்
தஞ்சை ஜில்லா மாயவரம் ஸ்ரீலனி. பாகவதர்
ம-ா-ா ஸ்ரீ ருமகிருஷ்ண ஐயரவர்கள் பாடிய

சாற்றுக்கவி.

நேசமுள சன்மார்க்க நெறிகளை நேர்த்தியாய்
நிலத்திலுரு மனுவகுப்பார்
பாசமுடன் பற்பல உபதேசம் பற்றியே
பண்புபெற பகர்ந்த நல்லார்
வாசமுடன் மஹம்மதியர் வாழுமிக நன்னகர்
வளர்விஷார் அஹ்ஸ னேன்போர்
ஈசனருளால் சர்வமத சமரஸ போதினியை
இயற்றி வெளி இட்டார்மன்னே.

மாயவரம் தாலுக்கா நீடூர் கிருமத்தில் மன்னார்குடி
ஸ்ரீமான் வித்வான் எ. எஸ். விஸ்வநாத
சாஸ்த்திரியாரவர்கள் பாடிய.

இரட்டை யாசரிய விருத்தம்.

மாயப்பிர பஞ்சமிதில் மானிட வகுப்பினர்
மதபேத கங்க ளில்லா
ஞாயஉப தேசங்கள் சன்மார்க்க நீதிகள்
சட்டமா ராயந்து எளிதில்
பாயமுட னிருலோகிற் பண்புபெற மேல்விஷார்
பாவலர் அஹ்ஸ னேன்போர்
ஆயத்திரட்டி இச் சர்வமத சமரஸ
போதினியச் சிட்டனனரோ.

தென்னார்காடு டிஸ்டிரிக்டு திருப்பாப் புலியூரில் திருவிதாங்கூர் மஹாகனம் ஹக்கீம் பாவலர் அஹ்மது தம்பி யவர்கள் பாடிய.

சாற்றுகவி.

இகபரத்துக் குறிய நன்றறிவு போதனை
இசுலாமும் ஹிந்துக் களும்
ஜெகமதனில் பற்பல வகுப்பினர் யாவரும்
செந்தமிழிர் காண எளிதில்
மிககாண மேல்விஷார் மேன்மைதீன் குலத்தவர்
முஹம்மதி புருஹீம் அஹ்ஸன்
பகருமிச் சர்வமத சமரஸ போதினியை
பாரில்வெளி யாக்கினனரே.

811
297.2

—⁂—

நார்த்தார்க்காடு டிஸ்டிரிக்டு மேலகுப்பம் மவுல்வீ வித்வான் ஆலீஜனுப், ஹகீம் முஹம்மது பாக்ஷா சாகிபவர்கள் பாடிய.

சாற்றுகவி.

நற்றவ மிகுத்தநல் முசுலிங்கள் மிகவாச
நன்னகர் மேல் விஷாரம்
உற்றவ ரகத்திருளை ஒதுக்கபல நூல்களால்
உபதேச மொழிந்த அஹ்ஸன்
மற்றவரு மிக்கலியில் மனுவகுப்பா ரெவரும்
மாக்ஷிபல னடைய தெளிவாய்ப்
பற்றவருள் சர்வமத சமரஸ போதினியைப்
பதிப்பிட்டுப் பகிர்ந்தனனரே.

இன்னும் 4 வித்வசிரோன்மணிகளால் இயற்றப்பெற்ற மதிப்புரைகள் ஆண்டவன் கிருபையால் 4, 5, 6-ம் பாகத்தில் தொடரும்.

இஃது

மதபேதகமில்லா பொதுநல நீதிகளைக்கூறும்

சர்வமத சமரஸ போதினி.

முதற் பாகம்.

கடவுள் வணக்கம்.

காப்பு - விருத்தம்.

தீர்க்கமுள சர்வமத சமரஸ போதினிநூல்
மார்க் முணராதார் மனம்போன போக்கிலுளார்
ஏர்க்கையுடன் வெற்றிபெற இயல்புபல வெடுத்துரைக்க
கூர்க்கபல நலங்காட்டுங் கோமானே நீ காப்பு. (1)

எண்சீர் - விருத்தம்.

வான்புவியை யடுக்கடுக்கா யமைத்து வைத்து
    வண்மையொடு வகுக்கபல படைப்பு எல்லாம்
தோன்றும்படி யொரு சொல்லால் மானிடற்குத்
    துய்தாகப் படைத் தெங்குந் தோற்றமில்லா
மேன்மையுள கடவுள்தனை மறந்து விட்டு
    மேதினியி லிடற்கள்பல செய்து தொட்டுப்
பான்மை யுடன் வாழ்மூட மானிடற்குப்
    பண்புபெற பகரபரன் காப்புதானே. (2)

அவையடக்கம்.

மெஞ்ஞானத் - தங்கமெட்டு.

எல்லாம் படைத்தானு மேகன் றனைப் போற்றி
நல்லார் நபியைவாழ்த்தி, அன்பரே
நவில்வதைக் கேட்பீர்களே, நேசரே
புவிநம்பா துணர் வீர்களே. (1)

மெஞ்ஞான வாசம் மேலாம்பிர காசம்
அஞ்ஞான வாசமெல்லாம், அன்பரே
அழிந்துபோ மறிவீர்களே, நேசரே
ஒழிந்துப்போ முணர் வீர்களே. (2)

அழியும் ஜடலமும் அவனியின் வாழ்க்கையுங்
கழிந்துப்போ மெளிதிலென்று, அன்பரே
கருதாதிக் காலத்திலே, நேசரே
மருங்காம் மனுக் களிலே. (3)

பாவம் புண்யமுணராப் பாதகர் செய்யிடரால்
கோபங் கடவுள் புறத்தால், அன்பரே
கொடுந்துயர் நம்பேரிலே, நேசரே
நெடுந்துய ரடர்ந் ததுவே. (4)

பற்பல நோய்களும் பரவியே பஞ்சமும்
நற்குண ஒற்றுமையும், அன்பரே
நாளுக்கு நாட்குறைந்தே, நேசரே
கோளும் புறமு மிகுத்தே. (5)

அன்னைத் தந்தையர்க்கு மவர்பெற்ற மக்களுக்கும்
இன்னும் பத்தா பாரியர்க்கும், அன்பரே
அன்புப் பிறியமற்றே, நேசரே
துன்பத்தி வாழ்வ துடனே. (6)

பெருமை மிகுத்ததுவும் பெற்றோரை வதைப்பதுவும்
தருமத்தைத் தட் டிடலும், அன்பரே
தாசிக்கிக் காசளித்தே, பலர்பரி
தேசிக ளாய்ப் பின்னுமே. (7)

தீங்குப் பலவிதமும் தேசமன்ன ரிடர்களும்
ஓங்கி வளர்வதகல, அன்பரே
உரைக்குமிச்சிறு நூலிதே, நலந்தேட
முறைபல மொழிந் துளதே. (8)

எளிதா யெவருங்கண்டு ஏற்றநற் செயற்கொண்டு
வழிதவ ரிடர்தட்டியே, அன்பரே
வரிசைகள் மனுபெறவே, நேசரே
பரிசுயாம் பெற நாடியே. (9)

வலியவர் எளியவர் வாங்கிப் பலனடைய
மலிவான கிரயம் வைக்க, அன்பரே
மனம் நாடி இந்நூலிதே, நேசரே
எனம் ஆறு பாகம் பிரித்தே. (10)

முதற்பாக மருபாகம் மூன்றும் பாகமென்று
இதமாக வேபிரித்து, அன்பரே
இன்னுமே யத்துடனே, நேசரே
பின்னுமே கேட்பீர்களே. (11)

நான்கா மைந்தாம்பாகம் மாறும்பாக மென்று
நன்மாரா யம்பலதை, அன்பரே
நற்கதிபெற நாடியே, நேசரே
சொர்க்கப் பதி சேரவே. (12)

பாகங்க ளொவ் வொன்றில் பண்பிரண் டத்தியாயம்
ஆகங்க ளுரைத்ததுவை, அன்பரே
அன்பொடு காண்பீர்களே, நேசரே
தென்பொடு கொள் வீர்களே. (13)

பாகங்க ளொவ்வொன்றின் பகர்வலே வீசமரை
ஆகவே வைத் துளதால், அன்பரே
அன்பாகப் பற்று வீர்களே, பற்றியே
இன்பாய்ப் படிப் பீர்களே. (14)

படிக்க எளிதாகப் பண்புகள் விரிவாக
அடியர் விஷார்வாசியில், அன்பரே
அஹ்ஸன் மொழிந் தானிதே, நலம்பெற
உகப்புட னுரைத்தா னிதே. (15)

மதபேத கமில்லா மாசில்லா நீதிபல
இதமாகப் பேசுவதால், அன்பரே
எவருமிதைக் காண்பார்களே, கண்டவர்கள்
தவருநல முணர் வார்களே. (16)

சள்ளையில்லா சர்வமத சமரஸ போதினியை
வெள்ளைச் சொல்லாற் காணவே, அன்பரே
விளம்பின தறிவீர்களே, நேசரே
களங்கமறக் காண் பீர்களே. (17)

கல்விக் களஞ்சியர்கள் கண்டாற் குறையிதிலே
நல்வித மாய்ந்து திருத்தி, கொடுக்கவே
நன்றை விரும்பு கின்றேன், அவர்களை
என்றும் பாராட்டு கிறேன். (18)

கண்டிதைப் படிப்பவர்க் கனிவாயாற் பிறருக்கும்
விண்டிடச் செய்யில் நலம், அன்பரே
வேணலன் பெருவீர்களே, பெருவதற்குக்
காணபிறர்க் குரைப் பீகர்ளே. (19)

நல்லது கெட்டதென்று நன்குணர, மானிடற்கு
வல்லபத்தைக் கொடுத் தாண்டவன், அன்பரே
வரிசைத்தர ஆமீனிதே அஹ்ஸனுட
பரிவாம் பிரார்த்தனை யிதே. (20)

ஆக. பாடல்கள்-22

1 வது—அத்தியாயம்.

ஆசிரியன் தன் நெஞ்சுக் குபதேசித்தில்.

உடற் கூற்று வண்ண-மெட்டு.

பூர்வீக முள்ளதொருப் பூமானைப் போற்றடா
கார்முகில் தவம் வதனக் காரணரை வாழ்த்தடா
ஆரணர்க ளாமவரின் அன்பர்களை ஏற்றடா
பூரணப் பெரியார்பூம் பாதம்நெஞ்சிற் சாற்றடா. (1)

அடியனேநீ ஆண்டவனி னுகுடிமைத் தானடா
பொடியனேநீ அவனளவிற் புண்ணியத்தை நாடடா
கொடியனேநீ கொடுமை செய்தாற் கொடுநரகாள்வாயடா
முடிவிலேநீ முத்தி பெரும் மோக்ஷவழித் தேடடா. (2)

பட்டமுங் கயிருபோலப் பறந்தடுக்கும் பக்தியை
நட்டமுங் கொளாதபடி நடுமுடிச்சுப் போடடா
திட்டமாய் கயிருகொண்டுத் திருட்டுப்பயலைக் கட்டடா
துட்டன்வலை சிக்கிவிட்டாற் றெல்லையில்மாள் வாயடா. (3)

பட்டுகெட்டுப் பாரில்தேடும் பாக்கியம்நில் லாதடா
சட்டுசட்டாய் வைத்தநிதி சவத்துடன் வராதடா
தட்டுபட்டுத் தரையில்விடத் தனிப்பயணம் வருமடா
தொட்டுத் தேடும் நலம் பொலந்தான் றுணைக்குவரு முணரடா. (4)

உணருமிட முணர்ந்திடா ஊதாரியாய்போ காதடா
குணமுணர்ந்துக் குரங்கு மூன்றைக் கூட்டிடாம லோட்டடா
பணமுபண்ணும் பெண்ணுமென்றே பக்தியை விடாதடா
மணமுடனே சர்வமத சமரஸநூல் காணடா. (5)

ஆனந்தக் களிப்பு.

பல்லவீ.

முத்திப் பெரும்வழியைத் தேடு, தேடி
புத்தியால் சொர்க்கத்தைக் கிரையங் கொண்டாடு. (முத்திப்)

சரணு பந்தம்.

(6) அற்ப உலகாசை யாலே, உந்த
னுவிலை செலவாக்கி டாமல் வீணுலே
சொற்பநாள் வியாபாரத் தாலே, சொர்க்கம்
சொந்தமாக்க உண்டுன், கைவசத் தாலே. (முத்திப்)

(7) ஏற்ற மனுவிற் பிறந்தாய், பின்ன
ரிணையில்லா இறையோனேவனே மறந்தாய்
மாற்றமா மிடர் செய்யத் தொடர்ந்தாய், தொடர்ந்து
மதிப்பான ஆயுளை வீணிலே இழந்தாய். (முத்திப்)

(8) உளவறிந் தொருபய லுதித்தான், நம்மை
ஊதாரியாக்கவே வரம்பெற்று அடுத்தான்
களவறிந் தக்கள்ள னவன்தான், அவனை
கயிற்றாலே கட்டியே வைப்போர் நல்லோர்தான். (முத்திப்)

(9) அல்பகல் காரதன் பாவி, நம்மை
அழிச்சாட்டியஞ் செய்யத் தூண்டுறான் லோபி
பல்பல நலவையாம் தாவிப், பற்றப்
பாதகன் பதரியே தட்டுறான் மேவி. (முத்திப்)

(10) உலகாசை மிகவூட்டி வைப்பான், வைத்து
உடையோனை மறக்கநம் மனதைக் கெடுப்பான்
நலம்போல முணரொட்டாத் தடுப்பான், தடுத்து
நன்றுச் செய்வோர்களை யகற்றத் தொடுப்பான். (முத்திப்)

(11) நல்லாருடன் னலந் தேடு, தேடி
நம்பி யவருடன் கலந்துற வாடு
பொல்லாரைக் கலந்தாலே கேடு, கெட்டுப்
பொங்கும் நரகுனக் காம்சொந்த வீடு. (முத்திப்)

(12) சர்வமத சமஸ மிதிலே, சாற்றல்
சந்தோஷ மாய்ப்பற்று முச்சிருக் கையிலே
பற்பல நலங்க ளிம் மையிலே, பற்றி
பாங்குப் பெறக்கேளு நாள்மரு மையிலே. (முத்திப்)

ஆக பாடல்கள் 34.

2 வது—அத்தியாயம்.

பொது நல உபதேசம்.

மேஞ்ஞானத் தங்கமேட்டு.

அன்பனே என்றுகப்பா யழைத்துமிக சிறப்பாய்
நன்றுபெற கண்டுகளிப்பாய், அன்பனே,
நவிலவே கேட்பாயடா, கேட்பதுவை
தவிரா துணர் வாயடா. (1)

எல்லாப் படைப்பில்மனு ஏற்றப் படைப்பென்று
சல்லாபம் மறை நான்கிலும், அன்பனே
சட்டமாய் கூறுதடா, கூறுவதை
திட்டமா யுணர் வாயடா. (2)

வந்தது யாமனுவாய் வளர்மோக்ஷந் தேடுதற்காய்
அந்தமாய் வந்த தல்லால், அன்பனே
அனத்தியத் திற்கல்லடா, அல்லவென
மனத்திற் பதி வாக்கடா. (3)

இன்னு னில்லை என்றே இவ்வுலகோர் சப்தமிடும்
முன்னாலே உன்வயதை, அன்பனே
முத்திபெற செலவாக்கடா, அப்ப உன்னை
புத்திமான் என் பாரடா. (4)

அயவாய் மிருகத்துக்கு மறிந்துணரு மானிடர்க்கும்
நயநஷ்ட மறிந்துணர, அன்பனே
நாமனுவாய் வந்ததடா, வந்தபடி
நேமநலஞ் செய் வாயடா. (5)

வந்த வகையுணரா வயதை வீணிலொழித்தால்
சந்தையை நம்பி செத்தால், அன்பனே
சஞ்ஜலம்பின் னேற்பா யடா, ஏர்க்கா முறை
தஞ்ஜமுடன் கேட் பாயடா. (6)

அறிவென்னும் புத்தியதை ஆடுமாடை மேயவிட்டு
நரிநாய்போல் நன் குணரான், அன்பனே
நார்க்காலிக் கொப் பாமடா, நன்மனுவில்
மூர்க்கனவ னுகு மடா. (7)

மாடா டிறக்கதசை மயிர்தோல் கொம் புதவுமுந்தன்
கூடாகுந் தேகம்விழுந்தால், அன்பனே
கொள்ளாரோர் காசீந் தடா, கொள்ளு முறைத்
தள்ளாது கேட் பாயடா. (8)

ஒருகாசுக் குதவாத ஊத்தை ஜடலமிதை
மருங்காக எண்ணுதடா, அன்பனே
மலஞ்சுமக்கும் பாண்டமடா, பாண்ட மென
நலமுணர்வோன் மனிதனடா. (9)

மனிதன் நடக்கைகொண்டு மாண்டாலு மதிப்புண்டு
இனிதறி வில்லான் செத்தால், அன்பனே
இங்குமங்கு மதிப் பேதடா, மதிப்பற்று
பங்க மல்லால்வே ரேதடா. (10)

சொர்க்கப் பதிப்புகுதல் சோர்ந்தழும் நரகாளல்
கர்க்காக மனுவசத்தில், அன்பனே
கட்டாய மிருக்கு தடா, இருப்பது
முட்டாள்கட் கெட் டாதடா. (11)

கட்டாயக் கைலாசங் கைவசமா யுள்ளதுவை
முட்டாள்கள் சிலருணரா, அன்பனே
மூர்க்கன்வலைப் பட்டா ரடா, பட்டவர்
கூர்க்கநலம் நாடா ரடா. (12)

மூர்க்கன் வலைபட்டு முழுமாயுள் வீணிலிட்டு
தீர்க்கநல் செயலை விட்டு, அன்பனே
தீங்காள னாகா தடா, திண்ணமுடன்
ஓங்கும் பக்தி செய் வாயடா. (13)

காலத்திற் பயிர் செய்யாக் கதிருக்க வந்தவன்போல்
கோலகால னுய்யவந்தால், அன்பனே
கூடுபோவ தெங்கன மடா, அங்குபோய்
ஈடு சொல்ல முடியாதடா. (14)

கூடு போகுமிடத்தைக் கூர்ந்தல் பகலுமதை
நாடுவது அனுதினமும், அன்பனே
நல்லோர்கள் நாட்ட மடா, நாட்டமிது
பொல்லோர்க் கனுகா தடா. (15)

உலகத் தொல்லையில்நீ உழன்றுக் கிடந்தாலும்
துலக்கமாய்ப் படைத்தவனே, அன்பனே
துய்யபக்தி செய்வா யடா, செய்திடில்
மெய்ப்பதியிற் புகுவா யடா. (16)

ஆமைக் குளக்கரையி லதின் முட்டை யைப்புதைத்து
நேமநிஷ்டை நீரில் செய்ய, அன்பனே
நேர்க்கருவாய் ஜெனிக்கிதடா, தாயாமை
தீர்க்கச்செய் பக்தி யடா. (17)

ஜனித்ததின் தாயாமை ஜலத்திலிருக்குமிடம்
இனிதாக சேர்க்கும் வல்லான், அன்பனே
எம்மைபதி சேர்ப்பானடா, சேருதற்கு
நம்பிபக்த்தி செய்வா யடா. (18)

கூடு கட்டிக்குளவி கொண்டிரண்டுப் புழுகைவைத்துப்
பாடும்பக்த்தி மந்தி ரத்தால், அன்பனே
பறக்குதிரு குளவியடா, குளவிசெய்த
சிறக்குமதின் பக்த்தி யடா. (19)

இதுபோல மானிடனே இறையோனை நீ ஜெபித்தால்
பதுமையாய் மருமையிலே, அன்பனே
பரமபதிப் புகுவா யடா, புகுதுவது
உரமிஃதென் றுணர்வா யடா. (20)

உலகசம்பத்துளே ஒழுங்குபோல் பற்றுமுறை
சலுகையொடு சாற்றுவதை, அன்பனே
சலிக்காமற் கேட்பாயடா, கேட்டுணர
நலிந்தழுக மாட்டாயடா. (21)

பாத்திரத் தின்தேனைப் பக்குவமா, ஈகுடித்தால்
நேத்தியாய் போகுமடா, அன்பனே
நெடுந்துய ரேர்க்கா தடா, ஈயதற்கு
படுந்துய ரணுகா தடா. (22)

முற்றுங் குடிக்கவேஈ மூழ்கில்நடுப் பாத்திரத்தில்
பற்றிப் பிடித்ததைத் தேனும், அன்பனே
பரதவிக்கச் செய்யுமடா, பரதவிப்பால்
மரணத்தை விரும்புமடா. (23)

இதுபோல இகமிதை யாமனுக்கள் பற்றல்நலம்
பதுமையில்லா மூங்கி விட்டால், அன்பனே
பரதவிக்கும் ஈக்கொப் படா, பரதவிக்கா
துறமாக உணர்வா யடா. (24)

பொருள்சொந்தம் சொந்தமென்று புகழ்பக்தி தவமிழந்து
மருள்பிடித்திருந்த பலர், அன்பனே
மண்ணரைக்குட் புகுந்தா ரடா, அவர்களின்
எண்ணம் பல வொழிந்ததடா. (25)

உலகாசை யிலுழன்று உடையோன் றனைமறந்து
பலபாக்யம் பற்றிவாழ்ந்தோர், அன்பனே
பாரிலெவர் நிலைத்தா ரடா, பாடையிலே
ஓரிபோல் சென் றாரடா. (26)

ஆயிரங் கோட்டைகட்டி அதிசேனைகள் திறட்டிப்
பாயிரமாய் வாழ் மன்னர்கள், அன்பனே
பாழ்புவியல் மறைந்தா ரடா, மறைந்தவர்
ஆழ்ந்தழிந் தொழிந் தாரடா. (27)

கோடீஸ்வ ரனென்றுக் கொடிநாட்டி வாழ்ந்தாலும்
நாடீஸ்வ ரேமன்வந் தால், அன்பனே
நாட்டுங்கொடி மீட்டா தடா, எவரையும்
மீட்டுதரக் கேட்கி லையடா. (28)

லட்சப் பிரபு என்றே லக்சர்பலர் செய்தாலும்
பட்சப்பிர பேமன் வந்தால், அன்பனே
பிட்சைப்பிர பேமே லடா, கோவணத்தில்
துட்டவனுக் குண்டு மடா. (29)

உடலுக்குப் போதுமட்டு முள்ளதை யுண்டுநாளும்
நடனஞ்செய் ஜெபதபத்தால், அன்பனே
நாளைக் கழிப்பா யடா, மருமைநாள்
வேளையுனக் குதவு மடா. (30)

காலநேரங் கழிவை காட்டுங் கடிகாரம்போல்
வாலவய துன் கழிவை, அன்பனே
வண்மையொடு காட்டுதடா, காட்டுவதை
உண்மைஎன் றுணர்வா யடா. (31)

சுத்தொன்றுக் கறுபது சுழலும் நிமிஷமது
இத்தகையுன் வயது மூச்சும், அன்பனே
எளிதிற் குறைவ தடா, குறையாய்ந்து
விழித்து நலஞ் செய்யடா. (32)

வயதுடன் மூச்சுனது வாணளில் குறைபுணர்ந்து
நயபத்தி வழியில் மூச்சை, அன்பனே
நாதன்புறம் வெளி யாக்கடா, வெளியாக்கல்
சாதக மாக்கிக் கொள்ளடா. (33)

நாதன் புறமுச்சை நயபக்தி வழிதேர்சை
போதமுடன் றேடுவது, அன்பனே
புத்தி மான்கள் தானடா, நாடுவது
வித்தை யில்லாற் கணுகாதடா. (34)

புத்திமான்கள் போகும் புகழ் சொர்க்கப் பதியாகும்
முத்திப் பெற்றோர்கட் கானந்தம், அன்பனே
முவ்வுலகிற் பெருவாரடா, அவர்சொல்
தவ்விப் பிடிப் பாயடா. (35)

இன்று னில்லை என்றே இவ்வுலகோர் சப்தமிடும்
முன்னாலே உன்வயதை, அன்பனே
முத்திபெற செல வாக்கடா, செலவுமுறை
சுத்த நலம் செய்வதடா. (36)

ஆண்டவனை மறக்கா அவனை பராக்காக்கா
நீண்டலேவா தேவி செய்வோர், அன்பனே
நேர்மையாண் அவர்தானடா, என்று மிதை
சீர்வேதங் கூறுதடா. (37)

பெண்ணு யுலகெங்கும் பேய்க்கோல மாயாண்கள்
மண்ணாய், மடிவ தேனோ, அன்பனே
மருங் காணுக நாடடா, நாடியே
தருமச் செயல் செய்யடா. (38)

ஆணுகப்பயணமா யாதியிடம் போகாமல்
வீணாய் போகாதடா, அன்பனே
வெற்றிபெற மாட்டாயடா, மருமையிலே
முற்றிபெரும் வழி தேடடா. (39)

வீரதீரமாணுய் வேந்தனிடம் போகமனப்
பூரண ஜெபதபத்தில், அன்பனே
போக்கல் நலம் வயதையடா, பொற்பதிமேல்
யார்க்குமே ஆசை யடா. (40)

அலங்கார சொர்க்கமது அனுதினமு மழைக்கிறது
கலகக்கார் மூவர் கூடி, அன்பனே
கானல்வனங் காட்டு ருரடா, காட்டியே
ஊனஞ் செய்வோரைக் கேளடா. (41)

பேராவ லாமூவர் பெண்மண்பொன் ளுகுமது
வீரா யுனே இழுத்து, அன்பனே
வெந்தணலுக் கோட்டு தடா, என்றென்றும்
சிந்திக்கச் செய் யுதடா. (42)

மாராட்டஞ் செய்திட மணஜெபம் தபம்விடப்
போராட்டக் கொடுமுறையை, அன்பனே
புத்திமான் தள் வாரடா, தவிழ்ந்தவர்
வெற்றி எங்கும் பெருவாரடா. (43)

தள்ளியே உள்ளமட்டுந் தனதுஜட லத்துக்கு
அள்ளியுண்டும் போது மாக்கி, அன்பனே
ஆதியை மறக் காரடா, மறவாமல்
சோதியை ஜெபிப் பாரடா. (44)

அறுபது எழுபது ஆயுளுக்குட் பயணமாய்
சிருமையாய் செல்வோ னுக்கு, அன்பனே
சீருட்ட மேதுக்கடா, யாரூடும்
போராட்டஞ் செய் யாதடா. (45)

சமத்துகள் சட்டங்கள் சாற்றயில் வந்தெமனுர்
அமத்துவார் ஆவி யினே, அன்பனே
அழியுமிந்த ஜடலமடா, ஜடலமிதை
பழிப்புக் காளாக் காதடா. (46)

செல்வ மிளமை மூப்பு சிறந்தழகு வின்னுன்கும்
நல்மரணம் வரையில் நில்லா, அன்பனே
நம்மைவிட் டகலு மடா, அகலுவதை
செம்மையாய் காண் பாயடா. (47)

ஆயிரஞ் சாணிபட்டா அழுத்தமா யிருந்தாலும்
பாயிரமாய் முடியுமல்லால், அன்பனே
பயணத்தில் உதகாதடா, பாக்கியங்கள்
சயனக் கினவுப் போலடா. (48)

பயணப் பட்டாவந்தால் பாரைவிட்டும் வெருங்கையாய்
கயரருப் பட்டம்போல் மனம், அன்பனே
காற்றுய்ப் பறக்கு மடா, அவ்வேளே
ஆற்றுவர்க் காணு ரடா. (49)

கட்டிப் பசும்பொன்னின் கட்டிடத்தில் வாழ்ந்தாலும்
எட்டி ஏமன் வந்தாலேமண், அன்பனே
இருட்டரையில் வசிப் பாயடா, வசித்தெங்கும்
சிறுமையி லாழ்வா யடா. (50)

விட்டுப் போகும்வீட்டை வேணமட்டுங் கட்டுகிறாய்
பட்டுப்போனல் போகும் வீட்டை, அன்பனே
பாழடையச் செய்யாதடா, பாழ்படுத்தி
தாழ்மையி லணுகா தெடா. (51)

இம்மையில் கட்டும்வீட்டை இதமாக மருமைக்கி
செம்மையாய் கட்டிகொள்ள, அன்பனே
சிந்தையி லுணர் வாயடா, உணர்ந்திடில்
அந்தமுடன் வாழ்வா யடா. (52)

கண்சிமிட்டி மூடுமுன்னே காலனுர் வந்துயிரை
பண்சிமிட்டிப் பற்றிடு வார், அன்பனே
பாருலகை நம்பாதடா, நம்பியே
பரதவித்துச் செல் லாதடா. (53)

செத்தால் திடீலென்று சேர்க்குமுன் திரவியத்தை
எத்தாகப் பலபேருண்டு, அன்பனே
ஏப்பம் விடுவாரடா, ஏப்பமிட்டு
மாப்பிள்ளைபோ லிருப் பாரடா. (54)

இன்னுமுன் சொத்தடைந்தோர் இடர்களைச் செய்துழன்றால்
பன்னுமதால் பங் குனக்கு, அன்பனே
புடைத்தோன் பகிர்வானடா, இவ்வார்த்தை
நடைசொல்லென் றெண் ணுதடா. (55)

உனதுவாழ் வுதனத்தா லுடையோனே மறக்காதே
மனதார்ந்து செய் புண்யமே, அன்பனே
மருமைக் குதவுமடா, உதவுமென்று
தருமத்தை செய் வாயடா. (56)

உடலால் வணங்குதற்கு முற்றஅறஞ் செய்வதற்கும்
நடனஜெபஞ் செய்வதற்கும், அன்பனே
நாமனுவாய் வந்த தடா, வந்தவன்
ஏமன்வரு முன் பற்றடா. (57)

நன்மைக ளின்னதென்று நன்குணர்ந்து செய்வதற்கு
தின்மையறிந் தகற்று தற்கு, அன்பனே
திட்டமா யுதித் தோமடா, மனுக்களிலே
சட்டமிஃ தெல்லோர்க் கடா. (58)

சட்ட மிதையுணரா சண்டாளர் கள்மிகவாய்
நட்டநய மறிந்துணரார், அன்பனே
நாட்டில் மிகுத் தாரடா, நன்குணரப்
பாட்டிற் பகர்ந் ததடா. (59)

ஆனதால் அத்யாயம் அன்பாகப் பனிரண்டும்
ஞானமாய் பாக மாறில், அன்பனே
சாற்றலைக் காண் பாயடா, கண்டுணர்ந்து
ஏற்றநலம் பெருவா யடா. (60)

கண்டிந்த முதற்பாகங் கருத்தி விருத்திபற்றி
விண்டிடும் மரு பாகத்தை, அன்பனே
விருப்பமாய் காண் பாயடா, இருலோகில்
மருங்காக வாழ்வாயடா. (61)

கடவுள் நம் மானிடர்க்கு கண்டுநலமுணர
அடவுட னுவல் தந்து, அன்பனே
ஆதரிக்கப் போதுமடா, அஹ்ஸனுட
போத நல் நாட்டமடா. (62)

இந்த முதற்பாகத்தில் பொதிந்த அத்யாயங்கள் 2-க்கு கூடிய பாடல்கள். 96

ஆண்டவன் கிருபையால் நல்லோர்தவத்தோர்கள் ஆசீர்வதிப்பால் சர்வமத சமரஸ போதினி ஆறுபாகத்தில் இந்த முதற்பாகம் முற்றுப்பெற்றது.

குறிப்பு :—சர்வமத சமரஸ போதினி மருபாகத்தில் 1-வது அத்தியாயம் உலகமாய்கை 2-வது அத்தியாயம் மனுதுலசங்கை என்றிரண்டு அத்தியாயங்கள் பொதிந்திருக்கின்றது. பாடல்கள் படிக்க இன்பம், பயன்களோ கேட்கப் பேரானந்தம். இதின் உண்மை இச்சிறு நூலை கைப்பற்றிக் கண்டு களிப்பவ ருணர்வார்கள் என்பது, கடவுள் கிருபையால் திண்ணம்.

இஃது

மதபேதகமில்லாப் பொதுநல நீதிகளைக்கூறும்

சர்வமத சமரஸ போதினி.

மருபாகம்.

கடவுள் வணக்கம்.

காப்பு - விருத்தம்.

சர்வமத சமரஸ போதினிநூல் மருபாகம்
கர்மதன முணராதிக் காசினியில் மானிடர்கள்
மர்மங்கள் பலதறிய மருங்காகச் சொல்வதற்குப்
பற்பலதும் படைத்தாளும் பராபரனே நீ காப்பு. (1)

அவையடக்கம்.

மெஞ்ஞானத் தங்கமெட்டு.

பதினான் குலகமாம் பாரவான் புவிஎல்லாம்
மதித்தாளும் நாதனை போற்றி, அன்பரே
மருங்காம் நபியை வாழ்த்தியே, அவர்கள் மேல்
சருகா சலவாத் தோதியே. (1)

நல்லது கெட்டதென்று நன்றாய் துலக்கிவைத்துப்
பொல்ல தகற்றும் பெரியார், அன்பரே
பூம்பாதம் நெஞ்சிற் சாற்றியே, நேசரே
சோம்பாமற் கேட்பீர்களே, (2)

கலிகாலத் துற்றசிலர் கடவுளை மறந்தபலர்
சலியாமற் செய் கொடுமைகள், அன்பரே
சதியாய்ந்தே அஹ்ஸனிதை, சங்கைபெற
மதித்து மருபாக மிதிலே. (3)

எந்த மதத்தினரு மிதமாக ஒற்றுநலம்
சிந்தையி லுணர்வதற்கு, அன்பரே
செப்பிடல் காண் பீர்களே, நேசரே
தப்பிடிற் றிருத்து வீர்களே. (4)

உலகத்தின் மாய்கையதும் ஒழுங்கான மனுமுறையும்
பல பல உபதேசமும், அன்பரே
பக்ஷமுடன் காண் பீர்களே, பிறருக்கும்
நிக்ஷயமாய் சொல் வீர்களே. (5)

சொல்வதி லேலபலன் சொற்கேட்டு நடப்பவர்கள்
நல் செய்கைபற்ற அதின், கூலிகள்
நவின்றோர்க்கு மறுமையிலே, நாதனும்
நவ மாய்தர ஆமீனிதே. (6)

ஆசரியன் தனது நெஞ்சத்திற் குபதேசம்.

ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

சிலகால வாழ்க்கை நம்பாதே, நம்பி
பலகாலம் நரகத்துக் காளய் கெடாதே. சில

சரணனுபந்தம்

(7) எல்லாப் படைப்புக்கு மேலாய், இந்த
இடுகொடா முலகத்திற் மனுவாகப் பிறந்தாய்
நல்லாக யோசித்து முன்பாய், நாளும்
நலவான செயலினுன் வயதைக் கழிப்பாய். சில

(8) மனதையோர் வாகன மாக்கு, அதில்
மதித்தேரி புத்தியாம் ஜாட்டையால் தாக்கு
சினத்தை யடியோட போக்கு, போக்கி
சீர்பாதஞ் சொந்தஊர் பாதையை நோக்கு. சில

(9) இல்லாமை யில் நின் றுதித்தாய், உதித்து
இம்மையில் மருமைக்கிப் பொருள் தேடவந்தாய்
பொல்லாங்கைத் தட்டித் தவிழ்வாய், தவிழ்ந்துப்
புண்யத்தை தேடி செய் அல்லும் பகலாய். சில

(10) நானுன் என்றவர் கோடி, உயிர்
நமன்பற்ற யவரவர் தனியரை நாடி
போனூர்கள் வந்தஊர் வாடி, போனோர்
புவிசந்தை யூருக்கு வரவில்லைத் தேடி. சில

(11) உலகத்தின் மாய்கை நம்பாதே, நம்பி
உகப்பாய் படைத்தோனை மறந்துக் கெடாதே
பலவிடர் எண்ணங் கொள்ளாதே, கொண்டு
பாதகன் நாரதன் வலையிற் சிக்காதே. சில

(12) மருபாகம் சர்வமத நூலே, மறவா
மனதாரக் கண்டுப் பிறர்க்கது போல
சருகாமற் சொல்மறக் காதே, சொல்ல
சார்ந்தவர் புண்யமுனக்குந் தப்பாதே. சில

(13) ஜகத்தை சதமென் றெண்ணுதே, எண்ணி
சவாரியாய் சுடுகாடு செல்லல் தப்பாதே
உகமை இதுவென் றெண்ணுதே, உனக்கு
உற்ற சவாரியின் நாள் தவருதே. சில

சதகம் மெட்டு.

தென்பாக பெற்றதாய் தந்தையர்க் கையிலே
திவ்ய சவாரி செய்து
தேட்டமா யண்ணமா ரக்கைமார் தோளிலே
திடனுய் சவாரி செய்தேன்
அன்பாக சிறுபிதா பெருபிதா தோளிலே
அடவாய் சவாரிசெய்து

அதற்குபின் பெரியதாய் சிறியதாய் தோளிலே
அன்பொடு சவாரி செய்தேன்
இன்பானை யொட்டகம் குதிரைபல் லக்கேரி
இயல்பாய் சவாரி செய்து
எற்றவண்டி கோச்சு பீட்டின் மோட்டரில்
இதமாய் சவாரி செய்தேன்
நன்றாக படகுபோட் ஷ்டீம்பர் கப்பலில்
நல்சுவார் செய்த அடியேன்
நான்குபேர் தோளிலே நானேர் சவாரியை
நாடாத குறை யறிகிலேன். (14)

அல்பகல் வாணளை ஆகாத கருமத்தில்
ஆக்கினேன் வீணாக்கினேன்
ஆசைபல தால்நலம் பொலமென் றறியாது
மறிந்துமனம் போல் நடந்தேன்
கல்லென்று முள்ளென்றுங் காடென்று மேடென்றுங்
கருதிடா கவலை எடுத்தேன்
காசாசை வைத்தெனது கனவாசைப் பித்தினல்
கஷ்டம்பல வெடுத் தயன்றேன்
பொல்லாத கருமங்கள் பொய்சூது வாதுடன்
பொல்லாங்கு செய்துளன்றேன்
பூலோக வாழ்க்கையிது புரளா திருக்குமென
போகுமூர் தனை மறந்தேன்
சல்லாப மனைமக்கள் உல்லாசம் சதமென்று
ஜகத்துக்கு தொண்டு செய்தேன்
ஜபதபம் நலம்பல நாடாத குறையகல
சர்வமத நூல் காண்பனே.

முதற்பாகத்தில் கூடியபாடல்கள் 96 உடன் இதுவரையில்
கூடிய பாடல்கள் 112

3-வது அத்தியாயம்.

உலகமாய்கை.

மெஞ்ஞான தங்கமெட்டு.

உலக மொருதாசி உற்றூர்க்கு அவள்நேசி
கலகத்தின் வலையை வீசி, அன்பனே
கன்னியவள் பிடிப்பாளடா, கருதியே
உன்னிப்பாய் கேட் பாயடா. (1)

அவள்வலை யிற்பட்டு ஆகாச் செயலைதொட்டுத்
தவராய் நடப் பவர்கள், அன்பனே
தணல்நர காழ்வாரடா, ஆழ்ந்துமே
முணங்கி யழுவா ரடா. (2)

உலகஞ் செத்தவிடக்கு உகக்கும் நாயுண்பதற்கு
நலத்தறிவார் நாடா ரென்று, அன்பனே
நன்மார்கங் கூறுதடா, கூறுவதை
அன்பா யுணர்வாயடா. (3)

பாவத் திற்குத்தலை பாராசை வைப்ப தென்று
எவல் விலக்கல் கூறும், அன்பனே
ஏற்றமறை சொல்லுதடா, சொல்லு வதை
மாற்றமா எண் ணுதடா. (4)

உலகத்தை தூஷித்தா லுனக்கது தொண்டு செய்யும்
பலபக்ஷம் நீயதை வைத்தால், அன்பனே
பணியுன்னுல் வாங்குமடா, வாங்கியே
துணிந் துன்னைத் துலைக்குமடா, (5)

மாநில சுகம் சுருக்கம் மருமை வாழ்க்கைப் பெருப்பம்
நானிலத்தோ ரறிந்துணர, அன்பனே
நன்மறைகள் கூறுதடா, கூறுவதை
அன்புடனே கேட் பாயடா. (6)

வந்தது சொந்த ஊரு வாழ்வதிப்போ சந்தையூரு
சொந்தஊர் பயணத் துக்கு, அன்பனே
சொத்தெதை நீ சேர்த்தா யடா, சேர்த் ததுவை
செத்தா லென்செய் வாயடா. (7)

சிலகால மிங்குவாழ சேகரித்தாய் விட்டுபோக
பலகாலம் வாழ்ந்திட சொத்தை, அன்பனே
பயணம்வரு முன் சேரடா, சேர்க்கில் நீ
மயங்காமற் செல் வாயடா. (8)

பழிகாரன் பட்டிணத்தில் பலர்வாழும் பாட்டையினில்
வழிகொள்ளை ஏமன் வந்தால், அன்பனே
வாசியற்றுப் போவாயடா, போகுவதை
தூஷிப்பா யெண்ணுதடா. (9)

வந்தஊர் போவதற்கு வழிபார்க்கு முன்றனுக்கு
சந்தையூர் கவலை ஏனோ, அன்பனே
சாற்ற சிலதைக் கேளடா, கேட்டு இந்த
வார்த்தையினைத் தட் டாதெடா. (10)

அடுக்கான மெத்தைகட்டி ஆண்டவனை மறக்காதே
சுடுகாடை விடுத்த முன்னே, யனுதினமுஞ்
சோம்பா தழைக்குதடா, அழைப்பதுவை
வேம்பாக எண் ணுதெடா. (11)

கட்டிவைத்தப் பையிருக்கக் காசுமட்டுங் காணுபோல்
எட்டிஏமன் வரஜடலம், அன்பனே
இருக்க உயிர் போகுமடா, போகின்ற
சுருக்க மாய்ந் துணர்வாயடா. (12)

பேசி இருக்கயிலே பேசிடா காலன் வந்து
கூசிடா துன்னுயிரை, அன்பனே
கூர்ந்துக்கைக் கொள்வாரடா, கொள்ளயிலே
சார்ந்தெவரும் தட் டாரடா. (13)

உணவோர் பிடியள்ளி உன்வாயி லிடுமுன்னே
குணகோல காலன்வந்து, அன்பனே
கொள்வாருன் உயிரையடா, கொண்டேகாத்
தள்வோரே கிடையா தடா. (14)

ஒருகண்ணை மூடியுந்தன் மருகண்ணை திறக்குமுன்
சுரூபமாய் காலன்வந்து, அன்பனே
சுருட்டுவார் மூச்சை யடா, நேசனே
திருஷ்டாந்த மிதற் கேனடா. (15)

இன்ன வருடமாத மிந்நாளி லிவ்வேளை
வின்னமற வருவதாகச், சீட்டோலை
வேந்தனிடம் தந் தாயடா, காலனதை
கூர்ந்துப் பார்த் துள்ளாரடா. (16)

பட்சிப் புருபலதை பற்ற ருஜாளியது
வட்டமிடல் போலெமனுர், அன்பனே
வையாளிப் போடுறூரடா, போடுவதைப்
பொய்யென்று எண் ணுதடா. (17)

வையாளிப் போட்டெமனுர் வாங்கிவிட்டா லுன்னுயிரை
ஒய்யார முன்னதைப் பாரா, அன்பனே
உரைப்பார்கள் சவமென் றடா, உன் தலைமை
முறைபெயர் தள்வாரடா. (18)

சவமென்றப் பேருனக்கு சாவடியர் சொல்லுமுன்னே
தவம்பல நலவைசெய்துன், அன்பனே
தடிக்கித் துணைத்தேடடா, தேடாமல்
ஒடிங்கி நீ போகாதெடா. (19)

காலமு மோர்குடையாய் காசினியை யாண்டாலும்
பாலராடு மணல்வீடுபோல், அன்பனே
பயணத்திற் ருேற்றுமடா, தோற்றிடு முன்
நயந்து நலந் தேடடா. (20)

அல்பகல் பாடுபட்டு ஆண்டவனை மறந்து கெட்டு
தொல்லுலகற் கெல்லாம் விட்டு, அன்பனே
துயரத்தோ டேகாதடா, மருமைக்கி
முயற்ச்சைபல செய்வா யடா. (21)

உண்டான போதுபெண்டு முற்றூர்கள் மெத்தவுண்டு
கொண்டாடும் வாழ் வொழிந்தால், அன்பனே
கூட்டமெல்லா மோட்ட மடா, உந்தனை
கொண்டணைக்க மாட் டாரடா. (22)

ஆலங் கனிபழுத்தா லடரும்பக்ஷி யானந்தமாய்
சாலஇலைப் பழ முதிர்ந்தால், அன்பனே
சார்ந்தெதுவுந் தங்காதடா, வருமையைப்
பார்த்தெவரும் பேசாரடா. (23)

இதுபோல மானிடனே இருந்தால் சம்பத்துனக்கு
பதுமையாய்க் கோண் டாடுவார், பணமற்றால்
பார்த்துமுகம் பேசாரடா, உன் சுகத்தைக்
கூர்ந்தெதையுங் கேளா ரடா. (24)

பொருள்தேடும் போகத்தால் புகழ்பக்தி தவமறந்தால்
அருள்நாளை மருமையிலே, ஆண்டவனால்
அன்புபெற மாட்டாயடா, என்றென்றும்
வெந்நரகி லாழ் வாயடா. (25)

மனைவி மக்கட்குபொருள் மதிக்கதவம் விட்டவனே
உனைவளர்க்க உணவீந்தவன், அன்பனே
உகந்தவர்க்குங் கொடுக்கா னடா, கொடுப்பவன்
ஜகமனைத்தும் வளர்ப்போனடா. (26)

எண்ணாது எண்ணமெல்லா மெண்ணி யேக்கங் கொண்டு
புண்ணாக்கி னல்மனதை, அன்பனே
புத்திமான் நீயல்லடா, மருமையிலே
முத்திபெற வழி கேளடா. (27)

துன்பமெது வந்தாலும் துய்யமக்கள் செத்தாலும்
கன்மவினைக் கண்டாலுமே, அன்பனே
கடவுள்செய லென் றெண்ணடா, எண்ணியே
நடப்புநலஞ் செய்யடா. (28)

வாழ்வு வருவதுவும் வாழ் வொழிந்துப் போகுவதுந்
தாழ்வு வருவதுவும், அன்பனே
தனியவன் நாட்டமடா, அவன் நாட்டம்
இனியெதிலும் முடியாதடா. (29)

வருமை யதுவந்தால் வையகத்தி லுனைக்காண
சிருமையி லாழ்ந்தோர்களை, அன்பனே
சீர்தூக்கி நீபாரடா, பார்ப்பதினால்
நேர்ந்ததுயர் அகலுமடா. (30)

149783

பேராசைக் கொண்டுநீ பெரும்பாடு பட்டாலும்
வாராது வாராதடா, அன்பனே
வருவதுவும் போகாதடா, போகாமல்
சருகாவந் தணுகுமடா. (32)

ஆண்டவ னுனக்காக அமைத்தவிதி கட்டளைபோல்
வேண்ட முன் உன்வசத்தில், அன்பனே
வெருசாய் வந் தணுகுமடா, அணுகுவது
ஒருவருக்கும் சாரா தடா. (33)

கனியந்தப் பருவத்தில் காய்த்துக் கனிதரும்போல்
இனிதா யுனக் குள்ளது, அன்பனே
இட்டநாள் கிட்டுமடா, கிட்டுவது
திட்ட மென் றுணர்வாயடா. (34)

உனக்கில்லா வஸ்தெதைய மோடி யோடிதேடினும்
தனக்கென்று கடுகளவும், அன்பனே
தான்பெற மாட் டாயடா, இதையுணரா
என் கெட் டலைவதடா. (35)

இட்ட துனக்குள்ள திருமலை நடுவிலே
திட்டாமய் கிடந்தாலு மாம், அன்பனே
தேடி யுனைச் சாருமடா, சாருவது
நாடி எங்கும் போகாதடா. (36)

உனக்கு இல்லாவஸ்த்து உதட்டிடை யிருந்தாலும்
தனதாக வெளிப் பட்டது, அன்பனே
தரையிலே மறையுமடா, மறைந்தது
குறித் தோரைச் சாருமடா. (37)

இந்த வகையுணரா எங்கியே அல்பகலாய்
விந்தைப் பொருள் தேடலால், அன்பனே
வெகுபேர்கள் கெட் டாரடா, கெட்டுமுன்
சொகுசை இழந் தாரடா. (38)

பலபாடு படுவதுவும் பாடியாடித் திரிவதுவும்
உலகத்துப ரெடுப்பதுவும், அன்பனே
ஒரு ஜாண் வயற் றுக்கடா, என்பதைநீ
அருமையா யுணர் வாயடா. (39)

கெட்ட பெயரெடுப்பதுவுங் கேடிப்பய லென்பதுவும்
இட்ட மெய்யைப் பொய்யாக்கலும், அன்பனே
எண் ஜாணுடம் புக்கடா, இவ்வுடலை
மண்கடேசி தின்னுமடா. (40)

மண்ணுண்ணுங் கட்டையை மாப்பெரி தாயெண்ணி
உண்ணு வளர்க்கவே அதை, ஊரார்சொத்
துனதென்றுக் கொள்ளாதடா, கொள்ள அது
உனக்கு பின் றுேல்லையடா. (41)

செத்தாற் றெரியுமப்பா செட்டியார் வாழ்வென்று
எத்தாகச் சொல்கருத்தை, அன்பனே
இருதயத்தில் வைப்பாயடா, வைத்திடில்
சிறுமை யுனக் கணுகாதடா. (42)

ஆளனுக்கு சாப்பாடும் அணியருமால் வேஷ்ட்டியதுந்
தாளனுக்குக் கிடைத்து விட்டால், அன்பனே
தனவா னவன் றுனடா, அவனிடம்
தினம்புத்திப் படிப் பாயடா. (43)

கடவுள் கொடுத்தகஞ்சிக் கால்வயிருப் போதுமென்று
அடவுடன் ஆயுள்மட்டும், நடப்பவர்
அவருக்குத் துயரேதடா, இருலோகில்
நவமா யிருப் பாரடா. (44)

ஜெகத்திலே சம்பத்து செல்வமிகப் பெற்றுலும்
இகழ்ச்சியாய் மனதுக்குள்ளே, அன்பனே
எவரையு மிகழாதடா, இகழ்ந்து நீ
பவரைப் பகட்டா தெடா. (45)

எவரையு மேகண்டு இகழ்ச்சியாய் யேசாதே
பவரிணு லேசிடி லுன்னே, அன்பனே
பலரேச நாள்வருமடா, வருமென்று
நலமுற்று உணர் வாயடா. (46)

யாருக்கும் மனம்நோகா யாரையுமே பிணங்கா
யாரோடுங் கோர்ட் டாடிடா, அன்பனே
பாருலகைக் கழிப்பாயடா, கழித்திடில்
சீருடனே வாழ்வாயடா. (47)

உபகாரஞ் செய்தோரை யொருபோதும் மறவாதே
அபகாரஞ் செய்பவர்க்கும், அன்பனே
உபகார மேசெய்யடா, இது முன்னோர்
சுப வார்த்தை யாகுமடா. (48)

பலபலஉபதேசம் பாதகர்க் குறைத்தாலும்
நலம்பொல மவர்செவிக்கி, அன்பனே
நண்பொடு ஏர்க்காதடா, ஏற்பதற்குப்
பண்புகமைக் கேட் பாயடா. (49)

கழுதைக்கி சந்தனம் கனஜவ்வா தத்தர்பூச
அழுகுற லபைய மல்லால், அன்பனே
அழகோசைக் காட்டாதடா, என்று முன்னோர்
பழைய மொழி யிஃதடா. (50)

கொம்புத்தேனே முடவன் குடிக்கக் குட்டிக்கரணம்
தெம்புபட போட்டாலுமே, அன்பனே
தேனவனுக் கெட் டாதடா, மூடருக்கு
ஞானவழிக் கிட்டா தடா. (51)

மார்கக முணராத மூர்க்கருக் கறிவுரைத்தால்
ஏர்க்கா தவர்செவிக்கி, அன்பனே
எட்டாத தேன்போலடா, மூடத்தன
முட்டா ளவன் தானடா. (52)

பரத்திலிருந்து இகம் பாங்குபெற வந்ததுற்று
சிரத்தைத் தவத்திலெடுத்தால், அன்பனே
சீர்பாதங் கிட்டுமடா, கிட்டியேநீ
நேர்பதிக்குட் புகுவாயடா. (53)

நல்லது கெட்டதென்று நன்குணரா பாவியற்கு
வல்லபநல் சொர்க்கப்பதி, அன்பனே
வாய்க்காது என்றெண்ணடா, எண்ணியே
மாய்கைஉல கைத் தட்டடா. (54)

புண்யம் பாவமுணராப் புவியாசை வைப்பவர்க்கு
எண்பதி சுவனத்தின் மேல், அன்பனே
இன்பாசை ஏதுக்கடா, அவனுக்கு
வெந்நரகஞ் சொந்த மடா. (55)

மூச்சுள்ள மட்டுக்கும் முன்னோன் றனைபயந்து
ஏச்சுலகின் மாய்கைவிட்டு, அன்பனே
ஏற்றநலஞ் செய்வாயடா, செய்திடில்
மாற்ற மில்லா மனு நீயடா. (56)

மருங்கு மனுக்கள்பெற மாநிலத்தி லுற்றவகை
அருமையாய் சாற்றுவதால் அன்பனே
அடவாக கேட்பாயடா கேட்டென்றும்
இடராஞ் செயல் தட்டடா. (57)

ஆண்டவன் யாவருக்கும் அடவா யுலகைதட்டி
பூண்டப் பெரியாருடன், அஹ்ஸனே
பொருந்தவே சேர்ப்பானடா, சேர்த்துமனு
மருங்குப் பெற ஆமீனடா. (58)

ஆக அத்தியாயங்கள் 3க்கு கூடிய பாடல்கள் 170.

4-வது அத்தியாயம்

மனுமுறை ஒழுங்கு.

மெஞ்ஞானத் தங்கமேட்டு

எழுத்தி லடங்காத எண்ண முடியாத
அழுத்தமாம் படைப்புக் கெல்லாம, அன்பனே
அதி ஏற்றம் மனுதானடா, என்பதை
நிதியாக கேட் பாயடா. (1)

மண்ணினுல் உற்பத்தி மானிடர்க ளானுலும்
கண்ணிய மவர் செய்கையால், அன்பனே
கன சொர்க்கம் ஆள்வாரடா, என்றென்றும்
மனமகிழ்ந் திருப் பாரடா. (2)

மனுவாய் பிறந்த சிலர் மாடாடு குணமெடுப்பர்
இனுமவர் செய் கெடும்பால், அன்பனே
எரிநர காழ்வாரடா, ஆழ்ந்ததில்
பரிதாபித் துழல் வாரடா. (3)

அற்பவரம் பெற்று அவனியில் வந்தமனு
நற்பக்த்தி செய்ஜடலம், அன்பனே
நன்றழியா ஜடலமடா, ஜடல மிதால்
என்றும் ஜெபிப் பதடா. (4)

உலகம் சதமென்று உற்றபக்த்தி இழந்து
நலம் நாடா ஜடலமது, அன்பனே
நலிந் தழிந்துப் போகுமடா, போகுமுன்னே
சலியாமல் நலஞ் செய்யடா. (5)

மண்ணிற் பிறந்ததுயா மண்ணுண்டு வளர்ந்தது யாம்
மண்ணே தான் நம்மை யுண்ணும், அன்பனே
மாய்கை இந்த ஜடலமடா, மாய்கைநம்பி
போய் நரகில் வீழ்காதடா. (6)

மாய்கை ஜெடலத்தால் மருங்கா மூச்சுள்ளமட்டும்
சாய்ந்தாலே நற்செய்கையில், அன்பனே
சந்தோஷங் காண் பாயடா, காண்பதிலே
சந்தேக மில் லையடா. (7)

அழியும்ஜடல மதிலேன்வை போகம்
வழிவந்த துரைக்கவென்றால், அன்பனே
வாய் நாவுங் கூசுதடா, கூசிடினும்
ஆய்ந்தறியக் கேட் பாயடா. (8)

ஊத்தைக் குழிய திலே உதிரப் புனலதிலே
சேத்தை இரு வர்குழைக்க, அன்பனே
சேமித்த உருவமடா, உருவ மசல்
காமத் துளி விந்தடா. (9)

அருவருப்பாகிய அந்தத் துளியிலுற்று
சருகாது வந்தவனே, உன் றனுக்கு
ஜம்பங்க ளேதுக்கடா, செய் ஜம்பம்
டம்பம் நிலைக் காடா. (9¼)

உருவ மைந்ததுட உற்ற வகையுணராத்
தருதலைக ளிக்காலத்தில், அன்பனே
தாரணியில் மிகுத் தாரடா, மிகுத்துபரி
பூரணனை மறந் தாரடா. (10)

ஊத்தை யுடல்நம்பி உலகாசை யிற்றிரும்பி
மூத்தவன் சொல்விருப்பி, அனந்தம்பேர்
மோக்ஷகதி விட்டாரடா, விட்ட வர்கள்
தூஷணைக்கா ளானரடா. (11)

ஜாதீ ஜாதீ என்பது ஜாதி எல்லா மனுஜாதி
ஆதியில் ஆதம்ஹவ்வா, அன்பனே
அவர்கள்மனு ஜாதியடா, அவர்க ளல்லால்
எவருமே கிடையாதடா. (12)

ஹிந்துக்கள் பார்வதிப் பரமேஸ்வரனென்றும்
விந்தை பெயர் வைத்தோரவர், அன்பனே
வேதவியாச ரடா, இந்த
சாதக முனிர்வா யடா. (13)

அன்னை தந்தைநமக்கு ஆகுமுத லவ்விருவர்
நன்னையமா யவர்கிளையில், அன்பனே
நாமனுவாய் பிறந்ததடா, பிறந் துலகில்
ஆமனுவா யானோ மடா. (14)

பலபல ஜாதியாய் பாரில் பிரித்து வைக்கக்
கலகஞ்செய் நாரதனும், அன்பனே
கற்பித்துப் பிரித் தானடா, பிரித்துப் பல
தர்க்கத்தில் விட் டானடா. (15)

அழிச்சாட்டி யச்செயலி லடர்பாவி நாரதனின்
பழியாய்ந்தி டாமல் மனு, அன்பனே
பலவகுப் பானாடா, ஆனாலும்
நலபக்ஷம் மாரா தடா. (16)

எவ்வகுப் பானாலு மெவரானா லும்ஆதம்
ஹவ்வாவின் மக்க ளடா, அன்பனே
அதையாய்ந்து முன்பாரடா, பார்த் தென்றும்
இதமொற்று வாழ் வாயடா. (17)

ஆதம் மனுவகுப்பை ஆண்டவன் தன்னுடைய
நீதம் நடத் தாட்டவே, அன்பனே
நிலத்தி லமைத் தானடா, அமைத்தபடி
நலநீதி நடத் தாட்டடா. (18)

வானேழும் புவிஏழும் வமைத்துப் பலபடைப்பும்
தானேதன் தத்துவத்தால், அன்பனே
தனியவ னமைத் தானடா, அவனன்றி
இனி தெவரு மில்லையடா. (19)

எல்லா மனுடருக்கா இதமாய் படைத்திறையோன்
நல்லா யவனைமனு, அன்பனே
நன்குணர வமைத்தானடா, உணர்ந்தவர்
நன்மோக்ஷம் பெருவாரடா. (20)

அவனை யுணராம லடவாய் நடவாமல்
பவராய்நீ மாறு செய்தால், அன்பனே
பாழ்நர காள் வாயடா, ஆழ்வதொடு
நீள்துய ரெடுப் பாயடா. (21)

ஆண்ஜாதிப் பெண்ஜாதி ஆகயிரு ஜாதியிலே
வீண்ஜாதி விலங்கினஜாதி, நலம்பொலம்
விருப்பமா யுண ராதடா, உணர்ந்திடார்
மிருகமதற் கொப்பாகு மடா. (22)

தேவன் புறத்தில்வந்த தீர்க்கத் தரசிகள்சொல்
ஆவலுடன் பற்றும் ஜாதியே, அன்பனே
ஆண்பெண்ணிரு ஜாதியடா, ஜாதியதில்
காண்கவய தொழிப் பாயடா. (23)

கடவுள் தனைமறந்துக் கடமைப் பலதிழந்து
அடற்பாவஞ் செய்ஜாதியர், அன்பனே
அவர்மிருக ஜாதியடா, அத்துடனே
எவரும்சேர ஒண் ணுதடா. (24)

மனுவாய் பிறந்தபின்னே மனுகுணம்பற்று முன்னே
பனுவல்நலஞ் செய்தாலுன்னே, அன்பனே
பாரோர் புகழ்வாரடா, இதனை
ஆராய்ந்து நலஞ் செய்யடா. (25)

பாரோ ருனைப்புகழ்ந்தால் படைத்தோ னுனைப்புகழ்ந்து
சீரோங்க இருபதியில், அன்பனே
சிறப்புனக் கீவானடா, இதையுற்று
உறத்தநல் பெயர் வாங்கடா. (26)

நன்றுப் பெயர்வாங்க நாதன், மருங்குணர
அன்புட னுரைப்பதினுல், அத்யாயம்
ஐந்திலே காண்பாயடா, கண்டுணர்ந்து
சிந்தையிற் பதிப்பாக்கடா. (27)

ஆக அத்யாயங்கள் 4க்கு கூடியபாடல்கள் 197

சர்வமத சமரஸ போதினி மருபாகம் கடவுள் கிருபையால் முற்றுப்பெற்றது.

குறிப்பு :—இனி 3-ம் பாகத்தில் 5-வது அத்தியாயங் கடவுளைக் கருதலும் 6-வது அத்தியாயம் மாதாப் பிதாக்களின் மருங்கும் தெளிவாகப்பேசியுள்ளதைக்காண்க ஆண்டவன் யாவருக்கும் நல்நாட்டம் தருவானாக ஆமீன் ஆருக :—

இஃது

மதபேதகமில்லாப் பொதுநல நீதிகளைக்கூறும்

சர்வமத சமரஸ போதினி.

மூன்றும் பாகம்.

கடவுள் வணக்கம்.

காப்பு - விருத்தம்.

அன்பாஇச் சர்வமத சமரஸ போதினிநூல்
இன்பாய்மூன் றும்பாக மிதிலே பொதிந்தவகைத்
தென்பாய் கடவுள்தனை தியானித்தல் பெற்றுரின்
பண்பானப் பாங்குசிலப் பகரவிறை காப்பாமே.

அவையடக்கம்.

மேஞ்ஞானத் தங்கமேட்டு.

அண்டம் பிண்டமெவ்வேழ் அதிற்படைப்பை வெவ்வேர்
தொண்டர் கமைத் தாளும்ஓர், கடவுளாந்
துய்ய நாதனைப் போற்றியே, மனுவோர்கள்
செய்ய நல முகந்தே. (1)

மிறட்டி யுலகிதிலே மிடர்வழியிற் சிக்காப்
பிறட்டிப் பிரகாசவழியி, லழைத்திடும்
பெரியோன் நபியை வாழ்த்தியே, அவர்களின்
நெறிமுறைப் பல துணர்ந்தே. (2)

முத்தி மனுக்கள்பெற முறைபல நலமுற
புத்தி யுரைக்கும் பெரியார், யாவரின்
பூம்பாதம் நெஞ்சிற் சாற்றியே, மருமையில்
நாம்நலம் பெற நாடியே. (3)

கடவுளைக் கருதலும் கனக்கப்பெற் றோர்களின்
நடப்பு முறைதவரி, சிற்சிலர்
நாட்டில் மிகுத் தார்களே, மிகுத்தவர்
கேட்டு நல முணர்வார்களே. (4)

அவர்கள் கொடுஞ் செயலால் ஆண்டவன் கோபத்தால்
அவனியோர் செய்தொழிலால், நஷ்டங்கள்
அடற்வ தகன் றிடவே, மனுமக்கள்
தொடர்ந்து செய் பக்தி முறையே. (5)

மிகவாசந் தீனவர் மேல்விஷாரம் நகர்
உகப்புட னேகடைக்கார், அப்துல்கனீ
உற்றசேய் அஹ்ஸனிதே, நற்செயல்
பற்றவே பகர்ந்தா னதே. (6)

ஆண்டவன் மானிடர்க்கு அறிவை யுணர தந்து
பூண்டநல் சுகமுறவே, யாவருக்கும்
பொற்பதி தர நாடியே, இச்சிறு நூல்
நற்போதனை கேட்பீர்களே. (7)

ஆனந்தக் களிப்பு.

பல்லவி.

வயதுள்ள மட்டிற் கட்டாயம், என்றும்
பயனுள்ள தைத்தேட லாகும் சிலாக்யம். வயதுள்ள

சரணுனு பந்தம்.

(8) இல்லாமை யில்நின் றுதித்தாய், உதித்து
இம்மையில் மருமைக்கிப் பொருள் தேட வந்தாய்
பொல்லாங்கைத் தழுவிப் பிடித்தாய், பிடித்து
புண்யம் பாவமென் றுணர்ந்திட மறந்தாய். வயதுள்ள

(9) நானு னென்பவர் கோடி, உயிர்
நமன்பற்ற யவரவர் சுடுக்காட்டை நாடி
போனுர் முன் வந்த ஊர் வாடி, போனேர்
போய் சந்தையுலக்கு வரவில்லைத்தேடி. வயதுள்ள

(10) கடவுள் அச்சம் நெஞ்சில் வைப்பாய், வைத்துக்
கருதியே என்றென்று மவனை ஜெபிப்பாய்
அடவாகப் பெற்றோரை மதிப்பாய், மதித்து
ஆகாத நாரதன் செயலை விடுப்பாய். வயதுள்ள

(11) நாரதன் செயல் நாட்டங் தட்டு, தட்டி
நல்லோரை யோசித்து நலமதிப் பிட்டு
காரணம் பின்குறிப் பிட்டுக். கண்டுக்
கலந்துறவாடிச் செய் களிப்பாய் பின்னிட்டு. வயதுள்ள

(12) அடுக்காக வாழ்வோரை யடுப்பான், அடுத்து
அறிவில்லாப் பெண்களை முன்தூது விடுப்பான்
முடுக்காய்பின் ஆண்களைத் தொடுப்பான், தொடுத்து
மூட்டிக் கலகத்தை குடும்பத்தையுடைப்பான், வயதுள்ள

(13) பெஞ்ஜாதி சொல் கேட்க வைப்பான், வைத்துப்
பெற்றோரை தடிகொண்டு மாட்டேன் றுரைப்பான்
அஞ்ஜாமல் மிஞ்சவே அடுப்பான், அடுத்து
அன்னைப் பிதாநிழல் அணலாக்க தொடுப்பான். வயதுள்ள

(14) அவன் வலை சிக்காமல் நாமும், நாளும்
அடவான நன்மை களைத்தேடு தற்கும்
நவமாய் மூன்றும்பாகம் பார்த்தும், என்றும்
நல்மோக்ஷவழி சார மனதிலே. நாடும். வயதுள்ள

முதற்பாகம் மருபாகம் இம்மட்டிற்கூடிய பாடல்கள் 209

5-வது அத்யாயம்.

கடவுளைக் கருதல்.

மெஞ்ஞானத் தங்கமேட்டு

இல்லாமை யில்நின்று மிதமாயுண் டென்பதில்
நல்லா யமைத் தவனை, அன்பனே
நன்குணரக் கேட் பாயடா, கேட்டபடி
அன்பொடு நடப் பாயடா. (1)

மனுவா யாதிவகுத்து மறுமை யவ்வூர்விடுத்து
அனுப்பஇவ் வூரடுத்த, அன்பனே
ஆண்டவனை மறக்காதடா, மறந்துவிட்டு
நீண்டத்துய ரெடுக்காதடா. (2)

அண்டமே ழும்புவிபு மடுக்கா யமைத்து வைத்து
கண்டபல சுகமீந்திடும், நமைவகுத்த
கடவுளை மறக்காதடா, மறந்திடில்
நடப்புனது சிறக் காதடா. (3)

பஞ்ஜாக் களரியிலே பாதகர் செய்துபுருக்
அஞ்ஜாமல் வைத்த சிலை, அன்பனே
கஞ்சாக்கட் குடியரடா, அதை நம்பி
நெஞ்சார்ந்துப் போற்று தெடா. (4)

உளியுங் கோடாலியா லுடலெங்குங், கொந்தப் பட்ட
துளிர்மரபு ருகின் சிலை, நம்பியே
துய்யோனை மறந்தாலடா, நரகத்தில்
நைய்யப் புடைப் பாரடா. (5)

பறக்க விழிக்கக் கண்ணை பதித்ததைத் தன்னாலே
சிறக்க சிமிட்ட வலா, புருகை நம்பி
சீர்கெட்டுப் போகாதடா, பஞ்ஜாவையும்
நேர்மையாய் போற் றுதெடா. (6)

லட்சங்கல் சூளையிலே பட்சமுடன் மூன்றெடுத்து
நட்டுவைத்து சிலர் போற்றுரார், அன்பனே
நஷ்டக் கல்லோ மற்றதடா, மற்றகல்
கஷ்ட மவர்க் களிப்ப தொடா. (7)

நன்றுப்பெருவதற்கும் நாதனை யுணர்வதற்கும்
வென்றிசொல் லுபதேசத்தை, அன்பனே
வீணாக எண் ணுதடா, எண்ணினுல்
காணுய் நீ சொர்க்கமடா. (8)

நல்லது கெட்டதென்று நாமனுக்கள் அறிந்துணர
வல்லபத்தைக் கொடுத் தாண்டவன், அடிய ரெமை
வகுத்துலகில் வைத்தானடா, உள்ளமட்டும்
தகுதியாம் நலமுண ரடா. (9)

ஹிந்துக்கள் மக்களிலே ஏற்றுமா யிவ்வுலகில்
வந்துதித்த மஹான்களின், நாட்டங்களை
வண்மையொடு காண்பாயடா, கண்டுரவே
உண்மைஎனக் கேட்பாயடா. (10)

பட்டணத் தாரருளும் பாரசிவ வாக்கியமும்
திட்டமுடன் கண்டாதியை, அன்பனே
தேட்டமாய் துதிப் பாயடா, துதித்திடில்
நீட்டசுக மாள்வாயடா. (11)

பதினெட்டு சித்தர்களும் பாரவான் ஞானிகளும்
மதித்த ஓர் ஆண்டவனை, அன்பனே
மனதார்ந்து துதிப் பாயடா, துதிப்பதுதான்
உனக்குத் துணை யாகுமடா. (12)

சாவடிக்கி வந்தபின்னே சந்தைகூட்டங் கலைபுமுன்னே
காவடியி லேற்ற உன்னே, அன்பனே
காலம் வருமுன் கேளடா, கடவுளை
சீலமுடன் துதிப் பாயடா. (13)

கருதியே நற்செயலில் கண்யமாம், வயதொழிக்கில்
அருமை சுவனப் பதியில், அன்பனே
ஆனந்த மடைவாயடா, அடைவதற்கு
ஞானவழி யைத் தேடடா. (14)

உற்று உணர்ந்துலகி லுன்னைமனு வகுப்பில்
முற்று மமைத் தவனை, மனதிலே
மூட்டிக்கரு தல்பகலடா, கருதிடிலுன்
ஏட்டில் நலம் பதியுமடா. (15)

இம்மை மறுமைக்கி எமக்குத் தேள்வைப் பலதை
நம்மையாள் நாதனிடம், அன்பனே
நன்குதர கேட்பாயடா, பிறரிடம்
ஒன்றுமே கேள்க்காதெடா. (16)

நாதனை யாமறந்து நாடுவது முடியாது
சாதகமா யாகிலுமது, அன்பனே
சட்டமாய் நிலைக் காதடா, நிலைத்தாலும்
நட்ட மல்லால் நயமேதடா. (17)

எதையுஞ் செயச்சொல்ல இதமாய்த் தொடங்கயில் முன்
அதையாண்ட வனைநினைத்து, அன்பனே
ஆரம்பஞ் செய்வாயடா, செய்தவகைப்
பூரணமா யாகுமடா. (18)

ஆண்டவனைமறந்து அடவாய் செய்க் கருமமது
நீண்டநாள் நிலைக்காதது, அன்பனே
நிந்தனையி லாழ்த்து மடா, ஆழ்த்தியே
சிந்தனையில் தாழ்த்துமடா. (19)

அரசனுக் குறியதை ஆளனைக் கேட்டுப் பெற
மர்மங் கண்டா லரசன், அன்பனே
மதித்திடர் செய்வானடா, இருவரையும்
சதி செய்யத் தொடுப்பானடா. (20)

மனைவி மாற்ருனுடன் மகிழவே கண்டாளன்
துணைவியை யொழிப்பதுபோல், ஒழித்தவனை
துய்யவன் துலைப்பானடா, அவன்மகிமை
அய்தமாய் கேட்பாயடா. (21)

ஆசா னுனைபடைக்க அனைதந்தைக் கின்பந்தா
கூசாம லவர்க ளொற்று, அன்பனே
கூடுங் கரு துள்ளியடா, துளியதனுல்
நாடறிய வந்தாயடா. (22)

தண்ணீர் துளியதினுற் றகுமாஞ் சிலையமைக்க
கண்யமாம் சக்தியது, அன்பனே
கடவுளுக்கே சொந்தமடா, சொந்தமிது
நடப்பெதற்கு மேற்கா தடா. (23)

ஒருதுளி நீரதை யொழுங்கா மனுவுருவாய்
மருங்காய் மாதா வயிற்றில், அன்பனே
மதிப்பா யமைத் தானடா, அமைத்தவனை
துதிப்பா யல் பகலுமடா. (24)

பத்து மாதம்வரையிற் பக்குவமாய் தாய்வயிற்றில்
தத்துவத்தா லுணவளித்து, அன்பனே
தகுமாய் வளர்த் தானடா, வளர்த்துன்னை
வெகுவாக கார்த் தானடா. (25)

தாயார் வயிற்றைவிட்டுத் தரையில் வந்த உனக்கு
வாயாற் கடிக்க மெல்ல, அன்பனே
வலுவற்றுக் கிடந்தாயடா, கிடந் தப்போ
சலுகையா யவன் பார்த்தடா. (26)

பல்லில்லா நீகிடக்கப், பாலை மாதா மார்பில்
வல்லபத்தா லாக்கி யூட்டி, அன்பனே
வல்லோன் வளர்த் தானடா, வளர்த் துனக்கு
எல்லாம்பின் கொடுத் தானடா. (27)

காற்று லடைந்துள்ளக் கட்டைக்கி யனுதினமும்
சோற்றுற் சுகம் பெறவே, அன்பனே
சோரீந்த துனக் காரடா, ஈந்துபல
பேரின்ப மளித் தானடா. (28)

கண்காது நாக்குமூக்கு கனவறிவைந் திவைகளுக்கு
பண்புசக்தி வெவ்வே ரதாய், அன்பனே
பதித்த துனக் காரடா, அவனை நீ
மதியற்று மறக் காதேடா. (29)

ஓடி நடந்திடவு முற்ற தெடுத்திடவும்
ஜோடியாய் கால்களை, அன்பனே
ஜோடித்த துனக்காரடா, இதையுணரா
ஆடித் திரியா தேடா. (30)

காதவழிபார்க்க காணும் பல வகைகூர்க்க
நீதமொடு நேத்திரங்கள், அன்பனே
நியமித்த துனக் காரடா, அமைத் தவனின்
இயல்பெவர்க் காகுமடா. (31)

வாசி யுள்ளமட்டும் வாசவீச்ச முணரும்
நாசியின் துவாரம் ரண்டும், அன்பனே
நாட்டிய துனக் காரடா, இந்தசக்தி
பூட்டின துனக் காரடா. (32)

கசப்பினிப் புளித்துவர் கண்டருந்த உந்தனுக்கு
பிசகிடா நாவின்றுசி, அன்பனே
பெட்பீந்த துனக் காரடா, பெரியோனின்
நட்பை யுணர் வாயடா. (33)

பேச்சிற் பிதற்றலில்லாப் பேசாத ஊமைஎன்கா
ஏச்சுக் கிடமில்லாமல், அன்பனே
இயல்பீந்த துனக்காரடா, அறியாமல்
வயதைவீ ணுக்கா தேடா. (34)

வாய்பேச இல்லாத வாகனமாய் வகுக்கா
தாய்வயிற்றில் மனுவுருவாய், அன்பனே
தானமைத்த துனேயாரடா, மறந்திடில்
ஊனத்தி லாழ்வாயடா. (35)

மனேவியு மக்களேயு மற்றுரவின் மித்திரரும்
அனேவரையு மானந்தமாய், அன்பனே
அமைத்த துனக்காரடா, ஆதிதான்
சமைத்தவ ஞகுமடா. (36)

உதையம் மதியம்மிரவு உற்றசாப் பாட்செலவு
நிதமுமே விதனமில்லா, அன்பனே
நிதிதந்த துனக் காரடா, தந்தவன்
அதிபதி வல்லானடா. (37)

பகலேயிற் சம்பாதிக்கப் பட்டகளே யல்தீர்க்க
அகலாம லென்றென்றுமே, அன்பனே
அளித்த துனக்காரடா, அளித்தவன்
பழப்பில்லாப் படைத்தோனடா. (38)

வீரம் வீறுப்புகளும் வேண்டும்பல அறிவுகளும்
தீரமுடன் பேசுதற்கு, அன்பனே
திறமீந்த துனக்காரடா, ஈந்தவன்
பரம னவன் றனடா. (39)

வின்ன மெதுவுமில்லா விருப்பமாய் படைத்தவனேக்
கன்மனதாய்க் கருதாதவன், அன்பனே
கடவுள்து ரோகியடா, துரோகியுடன்
அடவுடன் சேராதேடா. (40)

மாணிக்கத் தைக்காண மதிப்பான உன்வயதை
வீணில் ஒழிக் காதடா, அன்பனே
வேண ஜெபந் தபஞ் செய்யடா, செய்திடில்
ஊனமற வாழ்வாயடா. (41)

பொருளுற்றால் பூமியிதில் புகழ்கீர்த்தி யாவது போல்
அருளுற்றால் மருமையில்பேர், அன்பனே
அன்பாய் விளங்குமடா, அதினாலே
தென்பாக வாழ்வாயடா. (42)

ஆண்டவனைபயந்து அழிச்சாட்டியந்தவிழுந்து
நீண்டவருள் பெற்றாலேஉன், அன்பனே
நிஜவாசத் தலங் கேளடா, சுவனத்தில்
எஜமானா யிருப் பாயடா. (43)

மாணிக்கக் கற்களினால் மதிப்பாம் வைடூரியத்தால்
ஆணிப் பொன் மாளிகையால், அதில் வீடு
அம்பர் கஸ்த் தூரியடா, அதிலே
தெம்பு பெற இனுங்கேளடா. (44)

கட்டில் மணி முத்ததினால் கால்கள் நவரத்தினத்தால்
பட்டிற்பல வகையால், உடுப்புகள்
பற்பல வர்ணமடா, அத்துடனே
நற்சுவை இனுங் கேளடா. (45)

கனிவர்க்கத் தோட்டங்களும் காணும்பூஞ் சோலைகளும்
இனியநான் கருவிகளும், அன்பனே
இதமாய் குடிக்கவடா, குடித்துண்ண
நிதம்பல உணவுமடா. (46)

மிருதுவா மெத்தைகளும் மெல்லியசல் லாவிரிப்பும்
அருமைத் தலை யாணிகளும், அன்பனே
ஆனந்தம் பலதுமடா, அத்துடனே
ஞானமாய் இனுங்கேளடா. (47)

பலங்குநார்க் காலிகளும் பாவைமார் ரம்பையரும்
நலசுகம் பற்பலதும், அன்பனே
நன்றாய் கிடைக்குமடா, அத்துடனே
இன்பாள்கள் வகைகேளடா. (48)

பணிவிடை யாள்பலரும் பாரரசுப் போல் சிறப்பும்
அணிவகுப்பா யானந்தமும், அன்பனே
அன்பாய் பெருவாயடா, எப்போதுந்
தென்பா யிருப் பாயடா. (49)

என்றென்று மழியாத ஏற்ற சுகம் மாராத
தெம்புபட செய்புண்யமே, அன்பனே
திவ்யபதி சேர்க்குமடா, கெடும்புகளை
எவ்விதமுஞ் செய்யாதடா. (50)

கடவுளைக் கருதாமல் காலமும் வணங்காமல்
இடர்களை செய்பாதகர், அன்பனே
எரிநர காழ்வாரடா, இதிலாழ்ந்து
கரிந்து எரிவா ரடா. (51)

கடவுள் கருணைவைத்துக் காலமு மானிடற்கு
அடவுடன் சுகத்தைத் தந்து, அன்பனே
ஆதரிக்க ஆமீனடா, அஹ்ஸனையும்
நிதமுடன் கார்ப்பானடா. (52)

ஆக கூடிய அத்யாயங்கள் 5க்கு கூடிய பாடல்கள் 261

6-வது அத்யாயம்

மாதாப் பிதாக்களின் மருங்கு.

மெஞ்ஞானத் தங்கமெட்டு.

பெற்றூர் மருங்குணர்ந்துப் பிறியமாய் பணிசெய்து
வற்றூமல் வாழ்ந் துகந்து, அன்பனே
வரிசைப் பெருவாயடா, பெருவதுடன்
மரியாதை கிடைக்குமடா. (1)

மாதாப் பிதாவுமக்கள் மருங்குடன் கூடியொற்றுத்
தோதாக வாழ்மக்கள் தான், அன்பனே
துய்தான மக்களடா, அவர் குடும்பம்
அய்தமாய் நீளுமடா. (2)

தம்பெண்டீர் சொல்லெடுத்து தாய்தந்தை யைவெறுத்து
வம்புகள் செய் யாதடா, அன்பனே
வாழ்வொழிந்துப் போகுமடா, போனவுடன்
தாழ்வுவந் தணுகுமடா. (3)

மரத்திற்கு வேர்போல மக்களுக்குத் தாய்தந்தை
உரமாம்வேர் காய்ந்தால் மரம், அன்பனே
ஓங்காது போல் நீயடா, என்றென்றும்
நீங்காத் துயரமடா. (4)

பெண்டுப் பிள்ளைப்பொருள் பிரிந்திடிற் பின்பெறலாம்
சென்றிட்டால் தாய்தந் தையை, அன்பனே
ஜெகத்திற்பெற மாட் டாயடா, இச்சொல்லை
அகத்தினில் நிலை யாக்கடா. (5)

மாதா வயரெரிய வாழாய் நீ என்று முன்னோர்
தோதா யுரைத் ததுவை, அன்பனே
தூக்கி நேர் சீர்பாரடா, பார்த்திடில்
சீக்கிரந் தெளிவாயடா. (6)

மக்களுக்கு சொர்க்கம் மாதாவின் பாதங்கீழ்
கர்க்காக உண்டுமென்று, அடியனே
கழரினர் தவத்தோரடா, இந்த மொழி
அழகாம்நல் வார்த்தையடா. (7)

என்னை வணங்குமினை யாக்கிடாப் பெற்றவர்க்கு
நன்றுச் செய்யுங் காளென்றே, அன்பனே
நாத னுரைத் தானடா, பிறர்சொல்லும்
போதனை இதுவல்லடா. (8)

நாத னுரைக்கிமாற்றம் நானிலத்திற் பெற்றுரைப்
பாதகஞ் செய் சண்டாளர்க்கு, அன்பனே
பகர்வதைக் காண்பாயடா, கண்டு நீ
உகப்பாய் நடப்பாயடா. (9)

கடவுமே கொள்ளாது கனதாய் சகயா மது
அடவாக இதை யோசித்து, அன்பனே
அன்னைமனங் களிப்பாக்கடா, சுவனத்தில்
நன்னையம் பெருவாயடா. (10)

பெற்று உனைவளர்க்கப் பிறியத்தாய் பட்டதுயர்
உற்று உரைக்கவென்ருல், அன்பனே
உலகமே கொள்ளாதடா, கொண்டாலும்
நலஞ்சொல்ல முடியாதடா. (11)

கடவுள் தனைவருந்திக் கசப்புப் பலதறுந்தி
அடவுடன் உன்னைப் பெற்ற, அன்பனே
அன்னையின் றுயர் கேளடா, கேட்டு நீ
என்றென்று முணர்வாயடா. (12)

பத்துமா தம்முனதுப் பாரச் சுமைத்தாங்கி
முற்றுந்தாய் மூண்டத்துயர், அன்பனே
முன்னோ னறிவானடா, அவனல்லாற்
பின்னொருவ ரறியாரடா. (13)

இந்த வகைபுணரா இக்கால மக்கள் சிலர்
பந்தமாய்ப் பெற்ருர்களை, அன்பனே
பரிகாசஞ் செய்வாரடா, செய்வதுவை
அறிந்தஹ்ஸன் மொழி கேளடா. (14)

எவருந் தாங்கா பாரமெனைதாங்கி விட்டயோ நீ
பவராகப் பேசாதெந்தன், பாரிசொல்
உகப்பாய்கே ளென்பா னடா, தட்டிடிற்
சுகம்பூஜ்ய, மென்பானடா. (15)

அன்னை யில்லாவிட்டால் அவனியில் நீஏது
நன்மனைவி மக்களுமேது, அன்பனே
நாட்டிலுன் பெயரேதடா, உன்பெயரை
ஏட்டிலெவர் குறிப் பாரடா. (16)

அன்னை யில்லாமல்நீ ஆகாயத் திலிருந்து
நன்னைய மாய்குதித்து, அன்பனே
நானென்று வந்தாயோடா, வந்தவ நீ
தானென்று நிமுர்ந் தாயோடா. (17)

உன்றன் மக்கள்பேரி லுனக்குள்ளப் பிறியம்போல்
நன்றுன்மேற் ருய்தந்தைகள், அன்பனே
நற்பிறியம் வைத்தாரடா, வைத்ததுவை
சற்குணத்தா லுணர் வாயடா, (18)

அழுதாலே நீதுடித்து அப்பனே எனப் பதைத்து
வழுவாமல் பால்கொடுத்து, அன்பனே
வளர்த்தத் தாயைப் பாரடா, பார்த்திடில்
தளதளப்பாய் வாழ்வாயடா. (19)

உனக்கொரு நோயடுத்தா லுன்தாய் மிகத்துயராய்
தனக்கே அதுவந்தபோல், அன்பனே
தத்தளித் தயர்ந் தாளடா, வளர்த்ததை
மெத்தவறி வாற் காணடா. (20)

பத்தியம் பாங்குகளும் பச்சிலைப் பலதுண்டும்
நித்யமுன் நோய்தீரவே, அன்பனே
நெடுந்துய ரேற்ருளடா, ஏற்றதுடன்
படுந்துயர் மிகவாமடா. (21)

கழியு மலமுனதிற் கைற்றேடக் கோணுமல்
செழிப்பாக சந்தனம் போல, அன்பனே
சீர்தா யெடுத் தாளடா, இப்பிறியம்
நேர்மை எவர்க் காகுமடா. (22)

மலச்சிக்க லுனக்கானல் மாதா மனந்துடிப்பால்
பலபலப் பண்டிதர் கொண்டு, அன்பனே
பரிகாரஞ் செய்தாளடா, இரவெல்லா
முறங்கா கண்விழித் தாளடா. (23)

ஆளன்நீ யாகமட்டும் மன்னையாள் பட்டதுயர்
நீளஉரைக்க விரிவாய், அன்பனே
நீளுமதி ஞற்கேளடா, பெற்றோர்தன்
ஏழைத்தன முணாாதடா. (24)

கல்வியை யுன்றனக்குக் கற்பித்தால் பின்தமக்கு
நல்சுகமென்று பெற்ருேர், அன்பனே
நாடிப் பொருளழித்தாரடா, அவருண்ணு
தேடியுனக் களித் தாரடா. (25)

உன்னைப் படிக்கவைக்கா தொழுங்காய் திருத்தாவிட்டால்
வின்னமெந்த ஊழியத்தில், அன்பனே
விசனத்தி லாழ்வாயொடா, உன்மனதில்
நிஜமாய்ந் துணர் வாயடா. (26)

நல்லாப் படிக்கவைக்க நடுநாளில் வந்தவட்கு
எல்லாங் கொடுத் தீன்றோரை, அன்பனே
ஏக்கமுறச் செய்தாயோடா, அவர் நாடல்
ஊக்கமுட னொழித்தா யொடா. (27)

ஏக்கமுறப் பெற்றோரை ஏந்திழையாற் செய்தாலும்
ஊக்கமுட னுன்னன்றிக்கி, அன்பனே
உபதேச முறை கேளடா, கேட்டு பற்ற
சுபமுடன் வாழ்வாயடா. (28)

மனையாளி லிரண்டுகுண மாதா குணமென்று
வினையான மற்றொரு குணம், அன்பனே
வேசிகுண மாகுமடா, அவளுக்கு
காசின்மே லிச்சை யடா. (29)

பரிதேசிப் போலமகன் பரங்கற்று வருகினுந்தாய்
அறிதான தேற்ச்சை சொல்லி, என்மகனே
அயராதே என்பாளடா, தனக்குள்ளே
வயற்றைப் பிசை வாளடா. (30)

இதுபோல நன்மனையாள் இடற்பத்தா வுக்கடுத்தால்
பதுமையாய் தேற்சை சொல்லிப், பத்தாவுக்குப்
பணிமிகச் செய்வாளடா, நகையுடை
யணிந்துனை யாற்றுவ ளடா. (31)

அயர்ந்து நீவிடுவர அன்னையுன் வயிர்தடவி
நயந்துன்றன் க்ஷேமங்களை, நாடியவள்
நளினமாய் கேட்பாளடா, கேட்டுந்தன்
சலிப்பை யகற்றுவா ளடா. (32)

வெளியில் அயர்ந்து பத்தா வீடுவர வேசியொற்றுள்
களிப்பாக மடிதடவி, அன்பனே
காசுகனங் காண்பாளடா, காசிருந்தால்
பேசுவாள் சரசமடா. (33)

காசுள்ளமட்டுக்குங் கண்யமா யுபசரித்தும்
விசமற்றால் வேசி குணத்தாள், புருடனுடன்
வெடுவெடுத்து நிற்பாளடா, நின்றவளும்
கடுகடுத்துக் காய்வாளடா. (34)

14978

வாலி பத்தினியவளால் வல்லியாள் தூண்டுதலால்
போலித்தனம் பெற்றுருக்கு, அன்பனே
பொருத்தமெனச் செய்யாதடா, செய்துவிட்டுப்
பெருந்துயர்பின னேர்க் காதடா. (35)

காய்ப்பில்லா மரம்வெட்டிக் காள்வாயிற் கரிப்பது போல்
தாய்தந்தைக் கிடர் செய் மக்கள், அன்பனே
தணல்நரகி லாழ்வாரடா. அவர்களே
மணசொர்கம் விரும்பாதடா. (36)

இன்னு மெடுத்துரைக்க இச்சிறு நூல் பெருகும்
சொன்ன மட்டில் நடக்குமக்கள், இருபதியில்
சுகமாக வாழ்வாரடா, எப்போதும்
அகமகிழ்ந் திருப்பாரடா. (37)

அல்பகல் தாய்தந்தைக் கன்பாய் பணிகள் செய்த
நல்லோர்கள் கூட்டத்திலே, ஆண்டவன்
நமை சேர்க்க ஆமீனடா, சுவனத்தில்
எமை சேர்க்கப் போதுமடா. (38)

ஆகபாகம் மூன்றில், அத்யாயங்கள் 6-க்கு கூடிய பாடல்கள் 299

சர்வமத சமரஸ போதினி மூன்றம் பாகம் முற்றுப்பெற்றது.

ஆண்டவனுடைய கிருபா கடாக்ஷத்தினால் இக்காலத்துக் கேற்ற உபதேசங்களாக இந்த மூன்று பாகத்தில் கண்ட விசயங்கள் நீங்கலாக, முக்கியமான மிக்க அவசியமான அத்யாயங்கள் 6-ம் இது போல் 3-பாகங்களாக அச்சிட்டு 1932-ம் ஹு சூன்மீ 30உக் குள் வெளிவரு மென்பதை யாவரும் அறிவீர்களாக. இஃதும் இந்தமுன் மூன்றுபாகங்கள் போலவே பிரத்தி பாகம் 1-க்கு அணா 1½ ஆகவும் இம்மூன்று பாகத்துடன் 4-5-6 பாகம் சேர்ந்த புக் 1-க்கு அணா 8 ஆகவும் வி.பி. சார்ஜ் பிரத்தியேகம் என்றறிந்து விருப்ப முள்ளவர்கள் நேரில் பற்ற அல்லது ஆர்டர் எழுத விலாசம்.

க. முஹம்மது இப்றாஹீம்.
அஹ்ஸன் புக்டிபோ.
மேல்விஷாரம் P. O. (நார்த்தார்க்காடு. டி.

Solden & Co., Madras, S. E.

அறிவிப்பு.

பின்புறம் விளம்பரத்திற்கண்ட புத்தகங்கள் நேரில் வாங்குபவர்களுக்கு கிடைக்குமிடங்கள் :—

பூ. அப்துல் சுக்கூர் சாகிபு,
ஆர்க்காடு மண்டி.

எஸ். பி. எம். எ. அப்துல் ஹமீது அண்டு கோ.,
நெல்லிகுப்பம், கைலி மர்சண்ட்.

வா. அப்துல்கபூர் சாகிபு,
பூந்தமலை கண்டோன்மெண்டு, மளிகை.

பீ. எம். அப்துல் அஜீம் சாகிபு,
பவுரிங்பேட்டை ஷாப்பு.

பே. ஜெய்னுல் ஆபிதீன் சாகிபு,
சிங்காரப்பேட்டை மளிகை.

முத்தவல்லி வ. சாயபான் சாகிபு,
ஆலங்காயம் மண்டி.

வ. காதர்பக்ஷா ராவுத்தர்,
வேலூர் முஹம்மதியா ஒட்டல், மானேஜர்,
கும்பகோணம்.

த. ம. அப்துல் ரஷீத் சாகிபு,
பெரிய மஸ்ஜிது மதரஸா, திருவண்ணாமலை.

சந்தனம். அஹ்மத் உசேன் சாகிபு,
பாபுராயர் தெருவு, சில்லரைக்கடை, ராயவேலூர்.

உ

REGISTERED **TRADE MARK.**

மனோரஞ்சித மன்மதபாண லேகியம்.

இழந்த ஆண்மைத்தனத்தையும் சிறுவயதில் கெட்டபழக்கத்தினால் உண்டான பலவீனத்தையும் கிழத்தனத்தையும் போக்கி தூக்கம், பசி, மலபிரவர்தியை உண்டாக்கி மன்மதனை போலாக்கும் சக்தியை தருகிறது. சாப்பிடுவதற்கு அமிர்தத்தைப் போலிருக்கும். பத்தியமில்லை.

20 நாட்களுக்கு ரூபா 3—0—0.

ஆர்டருடன் தபால்சார்ஜ் சேர்த்து ரூபா 3—9—0 முன்னதாக அனுப்ப வேண்டும்.

Sole Agents :—**R. J. RAM & CO.,**
RAJARAJESWARI NILAYAM,
51-C, Lloyd Road, Royapettah P.O., MADRAS.

14978 600 008

வாலிபத்தினிபவரால் வல்லியாள் தூண்டுதலால்
போலித்தனம் பெற்றுருக்கு, அன்பனே
பொருத்தமெனச் செய்யாதடா, செய்துவிட்டுப்
பெருந்துயர்பினனேர்க் காதடா. (35)

காய்ப்பில்லா மரம்வெட்டிக் காள்வாயிற் கரிப்பது போல்
தாய்தந்தைக் கிடர் செய் மக்கள், அன்பனே
தணல்நரகி லாழ்வாரடா. அவர்களே
மணசொர்கம் விரும்பாதடா. (36)

இன்னு மெடுத்துரைக்க இச்சிறு நூல் பெருகும்
சொன்ன மட்டில் நடக்குமக்கள், இருபதியில்
சுகமாக வாழ்வாரடா, எப்போதும்
அகமகிழ்ந் திருப்பாரடா. (37)

அல்பகல் தாய்தந்தைக் கன்பாய் பணிகள் செய்த
நல்லோர்கள் கூட்டத்திலே, ஆண்டவன்
நமை சேர்க்க ஆமீனடா, சுவனத்தில்
எமை சேர்க்கப் போதுமடா. (38)

ஆகபாகம் மூன்றில், அத்யாயங்கள் 6-க்கு கூடிய பாடல்கள் 299

சர்வமத சமரஸ போதினி மூன்றம் பாகம் முற்றுப்பெற்றது.

ஆண்டவனுடைய கிருபா கடாக்ஷத்தினுல் இக்காலத்துக்கேற்ற உபதேசங்களாக இந்த மூன்று பாகத்தில் கண்ட விசயங்கள் நீங்கலாக, முக்கியமான மிக்க அவசியமான அத்யாயங்கள் 6-ம் இது போல் 3-பாகங்களாக அச்சிட்டு 1932-ம் ஹு சூன்மீ 30உக்குள் வெளிவரு மென்பதை யாவரும் அறிவீர்களாக. இஃதும் இந்தமுன் மூன்றுபாகங்கள் போலவே பிரத்தி பாகம் 1-க்கு அணு 1½ ஆகவும் இம்மூன்று பாகத்துடன் 4-5-6 பாகம் சேர்ந்த புக் 1-க்கு அணு 8 ஆகவும் வி.பி. சார்ஜ் பிரத்தியேகம் என்றறிந்து விருப்ப முள்ளவர்கள் நேரில் பற்ற அல்லது ஆர்டர் எழுத விலாசம்.

க. முஹம்மது இப்ருஹீம்.
அஹ்ஸன் புக்டிபோ.
மேல்விஷாரம் P. O. (நார்த்தார்க்காடு. டி.

Solden & Co., Madras, S. E.

அறிவிப்பு.

பின்புறம் விளம்பரத்திற்கண்ட புத்தகங்கள் நேரில் வாங்குபவர்களுக்கு கிடைக்குமிடங்கள் :—

பூ. அப்துல் சுக்கூர் சாகிபு,
ஆர்க்காடு மண்டி.

எஸ். பி. எம். எ. அப்துல் ஹமீது அண்டு கோ.,
நெல்லிகுப்பம், கைலி மர்சண்ட்.

வா. அப்துல்கபூர் சாகிபு,
பூந்தமலை கண்டோன்மெண்டு, மளிகை.

பீ. எம். அப்துல் அஜீம் சாகிபு,
பவுரிங்பேட்டை ஷாப்பு.

பே. ஜெய்னுல் ஆபிதீன் சாகிபு,
சிங்காரப்பேட்டை மளிகை.

முத்தவல்லி வ. சாயபான் சாகிபு,
ஆலங்காயம் மண்டி.

வ. காதர்பக்ஷா ரூவுத்தர்,
வேலூர் முஹம்மதியா ஓட்டல், மானேஜர்,
கும்பகோணம்.

த. ம. அப்துல் ரஷீத் சாகிபு,
பெரிய மஸ்ஜிது மதரஸா, திருவண்ணாமலை.

சந்தனம். அஹ்மத் உசேன் சாகிபு,
பாபுரூயர் தெருவு, சில்லரைக்கடை, ரூயவேலூர்.

உ

REGISTERED TRADE MARK.

மனோரஞ்சித மன்மதபாண லேகியம்.

இழந்த ஆண்மைத்தனத்தையும் சிறுவயதில் கெட்டபழக்கத்தினால் உண்டான பலவீனத்தையும் கிழத்தனத்தையும் போக்கி தூக்கம், பசி, மலபிரவர்த்தியை உண்டாக்கி மன்மதனை போலாக்கும் சக்தியை தருகிறது. சாப்பிடுவதற்கு அமிர்தத்தைப் போலிருக்கும். பத்தியமில்லை.

20 நாட்களுக்கு ரூபா **3—0—0**.

ஆர்டருடன் தபால்சார்ஜ் சேர்த்து ரூபா **3—9—0** முன்னதாக அனுப்ப வேண்டும்.

Sole Agents :—**R. J. RAM & CO.,**
RAJARAJESWARI NILAYAM,
51-C, Lloyd Road, Royapettah P.O., MADRAS.

விளம்பரம்.

அன்பர்காள் !

ஆண்டவனருளால் அடியிற் குறிப்பிட்டுள்ள சிற்றடிமையால் இதற்குமுன் அச்சிட்டு வெளியாய் விளங்கும் நூல்கள் 15-ம் கண்டு களித்த அனந்தம் ஹிந்து முஸ்லிம் நேயர்கள் விருப்பத்துடன் மானிட வகுப்பினர் எவரும் பிரயோஜனம் பெரும் வண்ணம். பொதுப்படையான உபதேசங்கள் பொதிந்த ஓர் நூல் கோர்வை செய்து வெளிப்படுத்தும்படி வெகு காலமாய் கேட்டுக்கொண்ட படிக்கி கடவுள் கிருபையால் இந்த,

சர்வமத சமரஸ போதினி என்று நூதனமாக அச்சிட்ட இப் புத்தகத்தில் இம்மைக்கும் மருமைக்கும் மிக்க அவசியமான நற் போதனைகளை சுமார் 625 பாட்டுகளை 12 அத்தியாயங்களாக பிறித்து எவரும் எளிதில் கைபற்றி ஆனந்தமடைய ஆறுபாகமாக செய்து பாகம் 1க்கு இரண்டு அத்தியாயங்கள் சேர்த்து ஆண்டவனுதவியால் இப்போது மூன்றுபாக மட்டும் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக் கிறது. மற்ற 3 பாகங்களும் ஆண்டவன் கிருபையால் 30-6-32க்குள் வெளிவரும்.

இதில் மானிடராய் பிறந்த ஒவ்வொருவர்களும் இகத்தில் நடக்கவேண்டிய ஒழுங்குகளும் அதனல் சந்தோஷமும், பரத் தில் முத்தி பெற்று ஆனந்தம்பெரும் விஷயங்களைப்பற்ற ஓர் நேர்வழி காட்டும் உபதேசியைப் போன்றது. படிக்கப் படிக்க, ஆனந்தந்தரக்கூடிய—இராகங்களோ: உடற்கூற்று வண்ணம், ஆனந்தக்களிப்பு, கும்மி, சதகம், மெஞ்ஞானத்தங்க முதலிய மெட்டுகளால் பாட்டுகள் சுருக்கம் பொருள்கள் விரிவாயுமுள்ள தாக கோர்வைச்செய்து வலியவர் எளியவர் எவரும் எளிதில் கைபற்ற ஆறுபாகம் ஆக பிரித்து பாகம் 1-க்கு அணு 1½ ஆகவும் மூன்று பாகம் சேர்ந்த புக் 1-க்கு அணு 4 ஆகவும் வி. பி. சார்ஜ், தனிப்பிரதி புக் 1-முதல் 10-க்கு அணு 5 ஆகவும் மூன்று பாகம் சேர்ந்த புக் 1-முதல் 5-க்கு அணு 5 ஆகவும் எற்படுகிறது. வி. பி. சார்ஜும் புத்தக கிரையத்துடன் சேர்த்தனுப்பப்படும். இந்த பதிப்பில் சோற்பகாபிகள் மட்டும் அச்சிட்டிருப்பதால், சிலவாகுமுன் மருபதிப்பை எதிர்பாருமல், கைபற்ற

விருப்பமுள்ளவர்கள் நேரில் அல்லது ஆர்டர் எழுத விலாசம் :—

க. முஹம்மது இப்ருஹீம்,

அஹ்ஸன் புக் டிபோ,

மேல் விஷாரம் P. O, (நார்த்தாற்காடு).

குறிப்பு :—இப்புத்தகங்கள் மதராஸ் திருவல்லிக்கேணி ஹைரோடு இஸ்லாமியா-புக் டிபோவிலும் கிடைக்கும்.